உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# ஸ்ரீமத் அருணகிரிநாதரும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்



ஸ்ரீமத் அருணகிரிநாதர்



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

ஆசிரியர்:
சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி
முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுரு தாச குருப்யோ நம

# ஸ்ரீமத் அருணகிரிநாதரும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்




ஆசிரியர்

சித்தாந்த சரபம், சிவஞான வாரிதி

**முனைவர் கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பிஎச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவசித்தாந்தத்துறை

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்



மஹாதேஜோ மண்டல சபை (15/48) அனுமதியுடன்

நூல் வெளியிடுவோர்

**கீதா இராஜமகேந்திரன்,** B.Com., M.B.A

Indian Oil Star Gas Distributor, Chennai

**கல்பனா மஹாதேவன்,** B.E.

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S. (USA)

**விஷ்ணுபிரியா கார்த்திகேயன்,** M.C.A.

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A. S.Q.S.(UK)

Information Technology Specialists, U.S.A

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | ஸ்ரீமத் அருணகிரிநாதரும்,<br>பாம்பன் ஸ்ரீமத்<br>குமரகுரதாச சுவாமிகளும் |
| ஆசிரியர் | : | சித்தாந்த சரபம்<br>முனைவர் கோமதி சூரியமூர்த்தி |
| மொழி | : | தமிழ் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2017 |
| தாள் | : | 70 ஜி.எஸ்.எம். மேப்லிதோ |
| மொத்த பக்கங்கள் | : | 72 |
| வெளியிட்டோர் | : | நடராாசன்–கனகாம்புஜம்<br>அறக்கட்டளை<br>திருவேரகம், 117, 86வது தெரு,<br>அசோக் நகர், சென்னை–600 083.<br>தொலைபேசி : 044 - 2489 0490<br>அலைபேசி : 94440 04136 |
| அச்சிட்டோர் | : | திரு. எஸ். அரங்கநாதன்<br>எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>54/2, முகம்மது உசேன் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை - 14.<br>தொலைபேசி : 28485236<br>அலைபேசி : 9884054572 |

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | பணிந்துரை | iv |
| | நன்றியுரை | viii |
| 1. | ஸ்ரீமத் அருணகிரிநாதர் வரலாறு | 1 |
| 2. | ஸ்ரீமத் அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் | 20 |
| 3. | ஸ்ரீமத் அருணகிரிநாதரும் பாம்பன் சுவாமிகளும் ஒப்பீடு | 38 |




ஸ்ரீமத் அருணகிரிநாதர்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

## பணிந்துரை
## (சித்தாந்த ரத்தினம், செ.வே. சதாநந்தன்)

**செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**"சும்மா இருசொல்லற" என் றலுமே**
**அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே.**

**தூ சா மணியும் துகிலும் புனைவாள்**
**நேசா முருகா நினதன் பருளால்**
**ஆசா நிகளம் துகளா கியபின்**
**பேசா அனுபூ திபிறந் ததுவே**

– அருணகிரிநாத சுவாமிகள்

**வருவாய் அறியா எளியேன் மருள் தீர் அடிகேள் சரணம்**
**திருவார் புகழ்சொன்ன பிரான் செல்வச் சிவமே சரணம்**
**பெருவானெனவே நாளும் பின்றா அருளால் எனையாள்**
**ஒருவானவனே உன்சீர் உறுநர்க்கு உலகம் பரமே.**

– பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

தண்ணார் தமிழ் அளிக்கும் தென்பாண்டி நாட்டிலுள்ள இராமேசுவரத்தலத்தில் 19 ஆம் நூற்றாண்டில் அவதரித்து சிவயோகப் பெருவாழ்வு (1850 - 1929 ) வாழ்ந்த அருளாளர் அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீ மத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார். "விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றபடி சிறுவயதிலேயே அதிதீவிர முருகபக்தி மிக்கவராக இருந்தார். முருகப் பெருமானின் அருளால்" **மதியால் வித்தகனாகி, மனதால் உத்தமனாகி பதிவாகி சிவஞானம்** பெற்று "முருகப் பெருமானைப் போற்றி 6666 பாடல்களையும், 32 வியாசங்களையும்," "**தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**" என்ற உயர்ந்த நோக்கோடு உலகிற்கு அருளியுள்ளார்கள்.

ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் முருகப் பெருமானால் நேரடியாக

ஆட்கொள்ளப்பட்டார். முருகப் பெருமான் "**முத்தைத் தரு பத்தித் திருநகை**" என அடி எடுத்துக் கொடுக்க, "**திருப்புகழ்**" முருக பிரபந்தத்தை பாடத் தொடங்கினார், சந்தப் பாடல்களான அவைகளில் ஏராளமான தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு உபதேசம் பெற்ற இருபெரும் ஞானிகளான அருணகிரிநாத சுவாமிகளையும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையும் அவர்கள் அருளிய பாடல்கள் மூலம் ஒப்பிட்டு ஆராய்ந்து ஒரு நூல் எழுதும்படி மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத்துறை, மதுரை காமராசர், பல்கலைக் கழகம் முனைவர் கோமதி சூரிய மூர்த்தி அம்மையார் அவர்களைக் கேட்டுக் கொண்டேன் அவர்களும் இதை அருட்பணியாக ஏற்றுக் கொண்டு தகுந்த ஆய்வுகள் செய்து இந்நூலை எழுதியுள்ளார்கள். 600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருணகிரியாரின் வாழ்க்கை வரலாறு முறையாகப் பதிவாகவில்லை. இருந்தும் அருணகிரி நாதரைப் பற்றிய பல அறிய குறிப்புகளைத்தேடி அவரின் ஆதாரபூர்வமான வரலாற்றை எழுதியுள்ளார்கள். அவரின் வரலாற்றுக்கு அரணாக அவரின் வாக்குகளையும் பாம்பன் சுவாமிகளின் வாக்குகளையும் மேற்கோளாக்காட்டியுள்ளார்கள்.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் முதலிய நூல்களை ஆராய்ந்து, அருணகிரிநாதர் அருளிய நூல்கள் என்று இரண்டாவது இயலை எழுதியுள்ளார்கள்

மூன்றாவதாக "**அருணகிரிநாதரும் பாம்பன் குமரகுருதாசர் ஒப்பீடு**" எழுதியுள்ளார்கள் முதலில் இருவரின் வாழ்க்கை வரலாற்றை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். அடுத்து இருவரும் அருளிய பாடல்களின் கருத்துக்களை ஒப்பீடு செய்துள்ளார்கள்

"**கந்தர் அனுபூதி பெற்று, கந்தர் அனுபூதி சொன்னவர் அருணகிரிநாத சுவாமிகள்**" என்று தாயுமான சுவாமிகள் போற்றுகின்றார்கள், கந்தர் அனுபூதி பாடல்களின் எண்ணிக்கைகளைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. மிகப்பழைய பதிப்புகளில் அந்த எண்ணிக்கை 101 என்றும் அண்மை பதிப்புகளில் 51 என்றும் குறிக்கப்பட்டுள்ளன. "**ஆடும் பரிவேல்**" என்று தொடங்கப்பட்டு "**பேசர் அனுபூதி பிறந்ததுவே**"

என முடித்தமையால் 43 பாடல்களையே உட்கொண்டது என்று பாம்பன் சுவாமிகள் 24.6.1918 தேதியில் சென்னை புதுப்பாக்கத்திலுள்ள சிவசுப்பிரமணி பக்தஜன சபையில் "**அருணகிரிநாதரின் உண்மைச்சரித்திரம்**" என்ற தலைப்பில் அருளுரையில் கூறியுள்ளார், மோன நிட்டையிலுருந்தே மாணிக்கவாசக சுவாமிகளைப் போல சிதாகாசப் பெருவெளியில் அருணகிரிநாதர் மறைந்த அருள் என்றார் பாம்பன் சுவாமிகள்.

ஊழ் வினைப் பயனாக உடம்பில் பெருநோய் எய்தப் பெற்றார் என்றும், சிற்றின்பத்தில் திளைத்து அந்நோய் அருணகிரிநாதருக்கு ஏற்படவில்லை என்றும் பாம்பன் சுவாமிகள் உறுதியுடன் அருளினார்கள்.

"**கொந்துகுழற் கோல் வளையார் குவிமுலைமேல் வீழ்வேனை**" என மாணிக்கவாசகப் பெருமான் கூறியவாறு, பெரியோர்கள் தங்களை இழிவின் பாற்படுத்தோல் வழக்கமாதலின். அவ்வாறு அருணகிரிநாதர் பாக்களிலும் சிலவுளவாம் என்றும் அவர் கல்வியும், ஒழுக்கமும் பக்தியும் நிரம்பியராகவே இருந்தார் என்பதும் ஏற்புடைமையாம் என்று பாம்பன் சுவாமிகள் விளக்கியுள்ளார். அவர் தம்முடைய மானசீக குருவான அருணகிரிநாதரைப் பலவாறு புகழ்ந்து, ஒவ்வொரு பதிகத்தின் நிறைவிலும் அவரை நினைத்துருகி போற்றியுள்ளது குருபக்தியை உணர்த்துவதாக அமைந்துள்ளது. **குருவருள் இன்றி திருவருள் இல்லை** என்பது பாம்பன் சுவாமிகள் அருள்வாக்காகும் கடந்த 44 ஆண்டுகளாக சென்னை, திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் பாம்பன் சுவாமிகளின் அருள் நூல்களை மஹா தேஜோ மண்டலசபை மேனாள் தலைவர் **Dr. ப. இராமன்,** மதுரை காமராஜர் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை மேனாள் பேராசிரியர் **Dr. கோமதி சூரியமூர்த்தி** போன்ற பெரும் புலவர்களின் விளக்கங்களோடு பதிப்பித்து மஹாதேஜோ மண்டல சபை அனுமதியுடன் வழங்கிவர பாம்பன் சுவாமிகள் குருவருளும் மயூரநாதப் பெருமான் திருவருளும் கூட்டிவருகின்றன. எங்கள் பெற்றோர் நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் 29 ஆகும்.

எங்கள் வேண்டுகோளைக் கனிவுடன் வழக்கம்போல் ஏற்று மிகக்குறுகிய நாட்களில் இந்த அருமையான நூலை எழுதிய

சித்தாந்த சரபம், சித்தாந்த கலாநிதி Dr. கோமதி சூரியமூர்த்தி அம்மையார் அவர்களுக்கு நடராசன்– கனகாபுஜம் அறக்கட்டளை சார்பாகவும் மஹாதேஜோ மண்டல சபையின் சார்பிலும் அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மையார் அவர்கள் அருணகிரிநாதர் மற்றும் பாம்பன் சுவாமிகள் பாடல்களில் மிகச்சிறந்த பக்தியும், புலமையும் பெற்றவராக விளங்குகின்றார்கள் என்பது அவர்கள் எழுதிய இந்நூல் மூலம் அறியலாம். இது சைவ சமய அன்பர்களுக்கும், குறிப்பாக முருகனடியார்களுக்கும் பயனுடையதாக விளங்கும் எனக் கருதப்படுகிறது.

அம்மையாரின் போற்றுதலுக்குரிய கணவர் மதுரை காமராசர் பல்கலைக் கழக மேனாள் பேராசிரியர் திருவாசகச் சுடர், சித்தாந்தத் தொண்டர் மாமணி முனைவர் **செ. ஈ. சூரியமூர்த்தி M.Sc. M.S., Ph.D., (USA)** அவர்களுக்கு நன்றி. இவர்களின் வழிகாட்டுதலாலும் , ஒத்துழைப்பினாலும் அம்மையார் அவர்களின் ஆன்மீக எழுத்துப்பணி மேன்மையடைகிறது. இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் **திரு. எஸ். அரங்கநாதன்** அவர்களுக்கு நன்றி. 1926 ஆம் ஆண்டில் பாம்பன் சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட மஹாதேஜோ மண்டல சபையை நன்றி உணர்வோடு போற்றுகின்றேன். இந்நூல் சென்னை, திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் 8.9.2017 தேதியில் அருணகிரிநாதர் குருபூஜை விழாவில் வெளியிடப்படுவது திருவருள் செயலாகும்.

இங்ஙனம்

**நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக**

பாம்பனார் – வாரியார் அடிப்பொடி, சித்தாந்தரத்தினம்

**செ.வே. சதாநந்தன்,** Chief Refinery Co-ordinator (Retd) Indian Oil

தலைவர். மஹா தேஜோ மண்டலசபை (தோற்றம் 1926)

அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள்

**பொ.ந. நமசிவாயம்**

GM (Retd) Madras Fertizer & M.D. A.B.N. Logistics

**வி.ச. சிவக்குமார்**
Manager (Retd)
Southern Industries

**கீதா இராசமகேந்திரன்**
Indian Oil Star Gas
Distributor

**ந.லோ. செந்தில் நாதன்**
Vice President, Standard
Chartered Bank

## நன்றியுரை

சித்தாந்த செம்மணி, சித்தாந்த சாகரம், சித்தாந்த சரபம்,
சித்தாந்த சேயிழை
**முனைவர் கோமதி சூரியமூர்த்தி**

**"அன்னையின் மேம்படு கருணையினால் குகன்**
**அடிகளைப் புகழ் தாசன்**
**தன்னை மெய்யடியவனாக்க என்று அகம் புறம்**
**சார்ந்து வந்து ஏற்றமதி**
**சொன்னவனாய் அனுபூதி சொன்னவற்குறு**
**சூரறுத்து எவராலும்**
**பண்ணவொண நல நல்கிய குகனுக்குப் பல்லாண்டு**
**கூறுதுமே"**

(பாம்பன் சுவாமிகள், திருக்கந்தர் திருப்பல்லாண்டு)

17.6.2017 தேதியில் பங்குனி உத்திர விழா முடிந்த பின் ஒருநாள் எங்களின் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய, சென்னை, மஹா தேஜோ மண்டல சபைத் தலைவரான பாம்பனார்–வாரியார் அடிப்பொடி சிவத்திரு செ.வே. சதாநந்தம் ஐயா அவர்கள், 8.7.2017 தேதியில் அருணகிரிநாதரின் குருபூஜை விழா நடைபெற உள்ளது. அம்மா அவர்கள் அதற்குள் "**ஸ்ரீமத் அருணகிரிநாதரும் பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகளும்**" என்ற தலைப்பில் நூல் எழுதித் தந்தால் வெளியிடலாம்" என அடியேனின் கணவரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். குறுகிய காலமே இருப்பதால், உடல் நலக்குறைவான அடியேன் நூல் எழுதத் தயங்கினேன் ஆனால் புத்தியோ, "நூல் எழுதக் கிடைத்துள்ள வாய்ப்பை தவறவிடாதே" என அறிவுறுத்தி, மனதில் ஆசையைத் தூண்டிற்று. அப்பொழுது கணவர் "**முன்னவரே முன்நின்றால் முடியாது ஒன்றும் இல்லை**," ஆதலால் பாம்பன் சுவாமிகளையும், முருகப் பெருமானையும் தியானித்து, நூல் எழுதத் தேவையான குறிப்புகளை முதலில் எழுது என ஊக்குவித்தார். "அவருகந்து சொன்ன பரிசே தொழும் பாய்ப்பணி செய்வோம்" என்றபடி குறிப்புகள் சேகரிக்க ஆரம்பித்தேன்.

பாம்பன் சுவாமிகள், இளம் வயதிலேயே “ எம் ஆண்டவனாகிய குமாரக் கடவுளே ! நின்னையே பல பாக்களால் பாடக் கடவேன். அருணகிரிநாதரின் பெயரை வைத்தே பிரபந்தத்தை முடிக்கக் கடவேன். அவருடைய வாக்குப் போல அடியேனுக்கும் வாக்கு உண்டாக வேண்டும்” என்று முருகப் பெருமானைப் பிராத்தித்து அப்பெருமானின் அருளால் பாடியவர். சிவத்திரு சித்தாந்த ரத்தினம், செ.வே. சதானந்தன் ஐயா அவர்கள் அன்பளித்த சுவாமிகளின் நூல்கள் பல அடியேனிடம் இருந்தமையால், ஒவ்வொரு பதிக இறுதியிலும், முருகப்பெருமானைப் போற்றும் முறையில் அருணகிரிநாதரைப் போற்றும் குறிப்புக்களைச் சேகரித்தேன்.

அன்புத் தந்தையார் அடியேனுக்குச் சீதனமாக கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான நூல்களிலிருந்து அருணகிரிநாதர் அருளிய நூல்களைத் தேடி எடுத்து, அவற்றுள் திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் ஆகிய நூல்களைப்படித்து ஆராய்ந்து குறிப்புக்கள் எடுத்தேன். சேகரித்த குறிப்புக்களை ஒருங்கே மீண்டும் பார்த்த போது நூல் எழுதமுடியும் என்ற தன்னம்பிக்கை உண்டாயிற்று. அடியேன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்தில் தலைமை ஆசிரியையாய் இருந்த செல்வி பொன்னுத்தாய் அவர்கள் மாணவிகட்குக் கூறும் அறிவுரைகளுள் ஒன்றான” வாழ்வில் வெற்றி பெற நமக்குத் தன்னம் பிக்கையும் வேண்டும். அவனம்பிக்கையும் ( ஆண்டவனின் மேல் நம்பிக்கை ) வேண்டும்” என்று கூறியது நினைவிற்கு வர பாம்பன் சுவாமி களையும், முருகப் பெருமானையும் தியானித்து நூல் எழுத ஆரம்பித்தேன். ஐயா அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குச் சற்று முன்பாகவே நூல் எழுதி முடிக்கத் துணை செய்த குருவருளுக்கும் திருவருளுக்கும் முதற்கண் அடியேனின் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கின்றேன்.

அருணகிரிநாதரின் வரலாற்று நூலை எழுதியுள்ள முனைவர் கு.வே. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் , திரு . வேல்கார்த்திகேயன் அவர்கட்கும் அடியேனின் நன்றி. இவர்களின் நூல்களைக் கொடுத்து உதவிய பேராசிரியர் நெல்லை. சொக்கலிங்கம் அவர்கட்கும் அடியேனின் நன்றி.

**“ யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்தது ”** என்று அருணகிரிநாதர் கூறியது போன்று, முருகப்பெருமான் உள்நின்று உணர்த்த, அடியேனின் சிற்றறிவுக்கு எட்டிய அளவில் இந்நூலை அடியேன் எழுதியுள்ளேன். நூல் எழுத வாய்ப்புத் தந்து வெளியிட்டு உதவும் சிவத்திரு. செ.வே. சதாநந்தம் ஐயா அவர்கட்கும், மஹா தேஜோ மண்டல சபையினருக்கும் அடியேனின் நன்றி.

பாம்பன் சுவமிகளின் புகழும், ஆறுமுகச் சிவனின் அருளும் மக்கள் உணரத் திருத் தொண்டாற்றி வருகின்றனர் மஹா தேஜோ மண்டல சபையினர். சுவாமிகளின் வாக்குப்படி இச்சபையினர் ஆண்டுதோறும் அருணகிரிநாதரின் குருபூஜை விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இவ்வாண்டு நடைபெறும் குருபூஜை விழாவில் அடியேன் எழுதிய இந்நூல் வெளியிடப் படுகின்றது.

மிகக் குறுகிய காலத்தில் நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய சென்னை, எஸ்.எஸ். கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் அடியேனின் நன்றி.

அடியேன் மேலும் பல நூல்கள் எழுதி வெளியிட சிவம் பெருக்கும் திருத் தொண்டு ஆற்றிவரும் சைவ ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்கள் அனைவரின் ஆசிர்வாதங்களையும் வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்ற துணையாய் உதவுகின்ற கணவர் டாக்டர் செ.ஈ. சூரியமூர்த்தி அவர்கட்கும் நன்றி. அடியேன் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவசமய உணர்வை ஊன்றி, வளர்த்து ஆளாக்கிய, சிவநெறிவழி வாழ்ந்து காட்டி அமரர்களாகிவிட்ட பிறந்து வீட்டுப் பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நன்றி கூர்ந்து வணங்குகின்றேன்.

அருணகிரிநாதரின் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற அங்கயற்கண்ணி உடனாய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை இறைஞ்சி வாழ்த்தி, அடியேனின் நன்றியுரையை நிறைவு செய்கின்றேன்.

**கோமதி சூரியமூர்த்தி**

# 1. ஸ்ரீமத் அருணகிரிநாதர் வரலாறு

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர்களில் தலைமை வாய்ந்தவராக விளங்கியவர் அருணகிரிநாதர் ஆவார். திருமாலும்,பிரமனும் இறைவனின் அடி முடி தேடிய தலம் திருவண்ணாமலை ஆகும். இது நினைக்க முக்தி தரும் தலம் ஆகும். இத்தலத்தில் பதினைந்தாம் நூற்றாண்டில் உருத்திர கணிகையர் மரபில் தோன்றி, தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் சிவார்ப்பணம் செய்து வதிந்த அருந்தவ முத்தம்மை என்னும் அம்மையார் தமக்கு ஆண் மகவு தேவை என அவாவுற்றார். அவ்வாறு ஆண் மகவு பிறக்கு மாயின் **அருணகிரி** எனப் பெயர் சூட்டுவேன் என உறுதி கொண்டார். திருவருணைத் தலத்தில் எழுந்தருளியுள்ள குமார மூர்த்தியிடம், "ஐயனே! யான் விரும்பியவாறு எனக்கு ஆண் மகவு பிறக்குமேல், அவன் தேவரீர் திருவருள் விலாச ஞானியாக இருக்கக் கிருபை புரிய வேண்டும்" என விண்ணப்பித்துத் தவமிருந்தார் அதன் பயனாக ஓர் ஆண் மகவை ஈன்றார். அருணகிரி என்று அம்மகவிற்குப் பெயர் சூட்டபட்டது.

"**சிவந்த நெருப்பு மலையின் பெயர் ஆகிய அருணகிரிநாதர் என்னும் எம் தந்தையாகிய தெய்வமே** " என்று பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானைக் கூறுகின்றார் (1.29. பொன்னவிர் மேனி, செ.10).

"**திருவண்ணாமலைத் தலத்து அருட் செல்வன் அருணகிரி**" என்று சுவாமிகள் கூறுகின்றார் (1.30. கருணாகர வேலன், செ.10).

**அண்ணாமலைப் பெயரான அருணகிரிநாதன் என்னும் பெயருடையானை அடிமை கொண்ட ஆறுமாமுகத் தெய்வமே** (1.40. அவனியாசை, செ.10) என்கிறார் சுவாமிகள்.

**அற்புதமான திருவருணையைத் தம் பெயராகக் கொண்ட அருணகிரிநாதப் பெருமானாகிய** எம் தெய்வத்திற்கு அப்பனே உனக்கு அடைக்கலம் என்று சுவாமிகள் கூறுகின்றார் (1.51. சரணவிண்ணப்பம், செ.10).

எந்தத் தலங்களில் குழந்தைகள் பிறக்கின்றனரோ, அந்தத் தலத்தின் கடவுளின் திருநாமத்தை ஞாபகார்த்தமாகவும், பிரார்த்

தனையின் படியும் அக்குழந்தைகுத் தாய் தந்தையர் பெயர் இட்டு அக்காலத்தில் வழங்குவது போன்று சுவாமிகட்கும் அருணகிரி என்னும் அத்தலப்பெயர் இடப்பட்டது என்று தோன்றுகின்றது.

அருணகிரி நாதர் செங்குந்தர் மரபைச் சேர்ந்தவர் என்று தக்க காரணங்களை விரிவாகக்காட்டி ஸ்ரீ அருணகிரி சரித்திர சங்கிரகம் கூறுகின்றது.

புலவர் புராணம் எழுதிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அகத்திய முனிவர் வளர்த்த நாய் ஒன்று தேவேந் திரனாகிப் பிறகு அருச்சுனன், கண்ணப்ப நாயனார், நக்கீரர், பொய்யா மொழிப் புலவர் ஆகியோராய்ப் பிறவி எடுத்துப் பின்னர். அருணகிரிநாதராகப் பிறந்தது என்று கூறுகின்றார். அருணகிரியார் வரலாறு போலப் பலப்பல புனைவுகளும், தத்தம் மனப்போக்கிற் கேற்ப மிகுதியாகக் கலந்த கற்பனைகளும் வேறு எவர் வரலாற்றிலும் இல்லை. தண்டபாணி சுவாமிகள் முருகனே வந்து இவ்வரலாற்றை உணர்த்தியதாகக் கூறுகின்றார் (கு.வெ. பாலசுப்பிரமணியம், அருணகிரியார், ஞானபரம்பரை தொகுதி 4, ப.10)

பதினைந்தாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியுள்ள மு. அருணாசலம் அவர்கள் புலவர் புராணம் கூறும். செய்திகள் உண்மையானவை அல்ல என்று மறுத்துரைக்கின்றார். அருணகிரியார் பிராமணர் என்பதோ உருத்திர கணிகையின் மகன் என்பதோ உண்மையன்று என்று கூறும் மு. அருணாசலம், அருணகிரியாரை ஒரு சீலமான வேளாளர் என்று குறிப்பதோடு, “கன்ம வசத்தால் விலைமாதருடன் கூடிச் சிற்றின்பத்துறை தோய்ந்து பொருள் இழந்து வருந்தினர் என்றும் கூறுகின்றார் (முற்கூறிய நூல், ப.10).

அருணகிரிநாத சுவாமிகள் வழிவழியாக முருகனிடத்து அடிமைத் திறம் பூண்டவர்.

**“பழைய நினது வழியடிமையும் விளங்கும் படிக்கு இனிது உணர்த்தி அருள்வாயே”**

(அகரமுதலென எனத் தொடங்கும் திருப்புகழ்)

**“விராலி மலையில் விளங்கிய கந்த என்று உனை**
**மகிழ்வொடு வந்திசெய் மைந்தன் என்றனை**
**வழிவழி அன்பு செய் தொண்டுகொண்டு அருள் பெருமாளே”**

(கரதலமு) திருப்புகழ்.

**“தஞ்சமாகிய வழிவழி அருள் பெறும்**
**அன்பினால் உனது அடி புகழ் அடிமை”**

என்ற திருப்புகழ் வாக்குகள் முருக பக்தியையே குறிக் கோளாகக் கொண்ட ஒரு சீலமான மரபைச் சேர்ந்தவர் என்பதை வலியுறுத்தும்

அருணகிரி நாதர் ஐந்துவயது ஆனதும் பள்ளிக்கு அனுப்பப் பட்டார். இளமையிலேயே நல்ல கல்வி அறிவும், இறை உணர்வும் நன்னெறியிலிருந்து எச்சூழலிலும் நழுவி விடக்கூடா தென்ற உள்ள உரனும் கொண்டவராகத் திகழ்தவர். அவருக்கு ஏழு வயது நிரம்பியபோது தாயார் தமக்கு நிர்யாணதசை நெருங்கியதை உணர்ந்து, தாம் அருமையாக தவமிருந்து ஈன்றெடுத்த தன் குமரனின் பிற்காலயோக க்ஷேமத்தைக் கண்குளிரப் பார்ப்பதற்குப் பிராப்தம் இல்லாது போயிற்றே என்று மனம் கலங்கி, தமது மகளாரை அழைத்துக் குழந்தையை அன்னாரிடம் ஒப்புவித்து, அருணகிரி நாதரைப்பற்றி முன்பு ஓர் நாளிரவில் முருகப் பெருமான், தமது சொப்பனத்தில்,“இக் குழந்தையை ஏனைய குழந்தைகளைப் போன்று சிறுபிள்ளை என எண்ணற்க. **விண்ணுலகும், மண்ணுலகும் மதிக்கக்கூடிய குழந்தை இதுவாகும். உலகம் உய்யும் பொருட்டு இக்குழந்தையை நும்பால் தந்தோம்** “என்று திருவாய் மலர்ந்தருளிய விஷயத்தைக் கூறி“இவனை நீ மிக அருமையாக வளர்த்து வருவாயாக” இது குல தெய்வமாகிய முருகக் கடவுள் அருளிய விஷயம். உன் ஞாபகத்தில் இருக்கட்டும்” என்று கூறினார். மகளார் ஆனந்த பரவசம் அடைந்து அவ்வாறே வளர்ப்பதாக வாக்களித்தார். பிறகு தாயார் சிவபதம் அடைந்தார். தாயாரை இழந்த அருணகிரியாரைத் தமக்கையார் மிக அன்புடன் தமது தாயாருக்கு வாக்களித்த வண்ணம் ஆதரித்து வந்தார்.

சுவாமிகள் தமக்குரியப் பிள்ளைப்பருவம் கடந்து காளைப் பருவத்திற்குரிய பதினாறு வயதை அடைந்தார், ஊழ்வினைப் பயனால் தொழுநோயுற்று மிகவும் வேதனை அடைந்தார், வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டு உயிர்விடத்துணிந்தார்.

**கோபுரத்து இளையனார் அருட்காட்சி**

அருணகிரிநாதர் அருணைக் கோயிலின் வடபால் உள்ள கோபுரத்தின் மேல் ஏறி நின்று கீழே குதித்து உயிர்விடத் துணிந்தார். முருகவேளின் வழிவழி அடிமையாதலால் முன் செய்த நல்வினைப் பயன் கைகூடும் நேரம் கூடிற்று. அப்பொழுது அருணையிலுள்ள கோபுரத்து இளையவரான முருகப் பெருமான் அருணகிரியார் முன் தோன்றித் தம் கையால் அவரைத் தாங்கிப் பிடித்து, குருவடிவில் அருள் புரிந்து உபதேசித்தார். தம் கைவேலால் அருணகிரிநாதரின் நாவில் ஆறெழுத்தையும் பொறித்து அருட்காட்சி நல்கினார். ஜெபமாலை அளித்தார். அவரது மலம் மாயை இடராயவற்றை ஒழித்தார் "**சும்மா இரு சொல்லற**" என உபதேசித்து அருளினார். (வேல் கார்த்திகேயன், அருணகிரி நாதர், சாகித்திய அகாதெமி வெளியீடு, முதல் பதிப்பு, 2019, பக். 12-14)

பழநி முருகன் தனக்குச் ஜெபமாலை தந்ததை, "**அபகார நிந்தை**" எனத் தொடங்கும் திருவாவினன்குடித் திருப்புகழில் **ஜெபமாலை தந்த சற்குருநாதர்** "என்று அருணகிரிநாதர் கூறுகின்றார் "**சும்மா இரு சொல்லற**" என்று முருகப் பெருமான் தனக்கு உபதேசித்ததை அருணகிரிநாதர்.

> **"செம்மான் மகளைத் திருடும் திருடன்**
> **பெம்மான் முருகன்பிறவான் இறவான்**
> **சும்மா இரு சொல் அற என்றலுமே**
> **அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"**

என்று கந்தரனுபூதி 12 ஆம் செய்யுளில் கூறுகின்றார். **சும்மா இரு** என்றது ஒன்றும் செய்யாதுவாளா இருத்தல் என்று பொருள் இல்லை, அருணகிரிநாதர் அடுத்த இரு சொற்களால் சும்மா இருத்தலுக்கு விளக்கம் தருகின்றார். சொல் அறச் சும்மா இருக்க வேண்டுமாம். சொல் அறுதல் என்றால் மௌனமாக இருத்தல்

என்று பொருள் கொண்டு விடக்கூடாது. சொல் என்பது வாயினால் பேசப் பெறும் சொல்லை மட்டும் இங்குக் குறிக்கவில்லை. மனதில் எண்ண ஓட்டம் நடைபெறுகிறது. எவ்வாறு எண்ணுகிறோம்? சொற்களின் உதவி கொண்டுதானே எண்ணம் நடைபெறுகிறது. மனத்தில் எண்ணம் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதையே குறித்தார். மயக்க நிலையிலும், கனவு நிலையிலும் கூட எண்ணம் உண்டு. புறமனம் வேலை செய்யாவிடினும் அகமனம் பணி புரிந்து கொண்டே இருக்கும். **அதுவும் அடங்கவேண்டும்** என்பதையே "**சொல் அறச் சும்மா இரு**" என்றார். **அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே என்றது அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற மூன்றும் அற்ற நிலையாகும்** (அ.ச. ஞானசம்பந்தம், "சொல் அற"கட்டுரை ஸ்ரீ அருணகிரிநாதர் ஆறாவது நூற்றாண்டு ஜெயந்திவிழா, 1975, புதுடில்லி, பக். 32-34).

சும்மா இருத்தலாவது விழித்துக் கொண்டிருக்கும்போதே மனோ வியாபாரம் அற்று இருத்தல் என வடிவேல் செட்டியார் பொருள் கூறுவார்.

**"சும்மா இரு என நீ சொல்லப் பொருள் ஒன்றும்**
**அம்மா அறிந்திலேன் என்று உரைத்து எம்மான்**
**அருணகிரிநாதர் அனுபவம் நாயேற்குக்**
**கருணை புரி பேரூரா காட்டு"**

என சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

சிற்றின்பத்தையும், பெண்ணாசையால் வரும் கேட்டையும் அருணகிரிநாதர் பாடியுள்ளார் என்பது உண்மையே. இதற்காக அவர் அச்சேற்றிலேயே அழுந்திக்கிடந்தார் என்று எழுதுதல் ஞானியரின் பாடுநெறி அறியாமையால் விளைந்த குற்றமாகும். தம்முடைய குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றுவது இழிகுணம் உடையவர்கள் செயல். மற்றவர்கள் குற்றங்களைத் தம்முடையவைகளாகக் கூறுவது பெருமக்கள் இயல்பு.

பெண்ணைச் சிற்றின்பப் பொருள் என்று நினைத்து கொண்டிருக்கு மட்டும் மெய்யுணர்வு பிறத்தல் அரிது. அருணகிரியார் உலகோரை நோக்கிப் "**பெண்ணை சிற்றின்பப் பொருளாகக் கருதி**

**இடர்ப்பட தேயுங்கள்**" என்னும் பொருளை அறிவுறுத்தும் வழித் தமது உள்ளத்தை நொந்து கொள்வது நினைவில் கொள்ளத்தக்கது (திரு.வி.க. முருகன் அல்லது அழகு, ப. 83). **ஆடவர் உள்ளத்தைத் திருத்தப் பிறந்தன அருணகிரியாரின் மொழிகள்** என்கிறார். திரு.வி.க. அருணகிரியார் பெண்ணாசையைக் கடிந்து கூறுயிருத்தல் உண்மை. பெண்ணைக் கடிதலுக்கும், பெண்ணாசையைக் கடிதலுக்கும் வேற்றுமை உண்டு. பெண்ணைக் காமம் என்னும் ஆசைப் பொருளாகக் கொள்வது ஒன்று. பெண்ணைத் தெய்வமாகக் கோடல் இன்னொன்று. பெண்ணை ஆசைப் பொருளாகக் கருதுவது அறியாமை. அவ்வழகைக் கடவுளாகக் கருதுவது அறிவு. அருணகிரிநாதரும் பெண்ணின் மாட்டெழும் காம வேட்கையைக் கடந்தாரேயன்றிப் பெண்ணைக் கடிந்தார். இல்லை எனத் திரு.வி.க கூறுகின்றார் (முருகன் அல்லது அழகு, ப.83).

அருணகிரிநாதரைத் தமத ஞானகுருவாகவும், எந்தையாகவும் , தெய்வமாகவும் போற்றும் பாம்பன் சுவாமிகள் தம் நூல்களில் அருணகிரி நாதரை 403 பாடல்களில் போற்றியுள்ளார்.

"**காமம் என்னும் பெருங்கடலைக் கடந்த அருணகிரிப் பெருமான்**" ( 5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 78.துறவு, செ.10 ) என்றும்.

**அருணகிரிப் பெருமானின் மலக்குற்றத்தை அறவே அழித்து ஆட்கொண்ட குகன்** (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 86. சீர்பூத்த இராமரகசியம், செ.10 ) என்றும் "இகழ்ச்சிக்குரிய குறைகள் அனைத்தும் இல்லாமல் உயர்ந்திருந்த எந்தை அருணகிரிப் பெருமான் (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 57. கருணைத்தேவு, செ.10 ) என்றும், "**அருளொழுக்க நெறிக்கு மாறுபட்ட குற்றம் எதுவும் அணுகப்பெறாத அருணகிரிப் பெருமான்**" ( 5. திருப்பா, இரண்டாம் புத்தகம்,41. ஆனந்த வெயில், செ.10 ) என்றும், சீவான்மாக்களின் குற்றங்கள் அனைத்தையும் அறுத்தெறிந்து தூய்மையுற்ற அருணகிரிப் பெருமானின் இதயக் கடவுளாக விளங்கும் எமது குகப் பெருமானின் தண்ணிய அருளையே பற்றாகக் கொண்டு உய்திபெறும் தெரிந்த ஞானப்பேறுடையோர்

அனைவர்க்கும் நாம் ஆட்பட்டிருப்போம் (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 49. வண்மை, செ.10) என்றும், **சுவாமிகள் அருணகிரி நாதரைப் போற்றுவது, அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்ற பின் காமக், குற்றங்கள் அனைத்தும் நீங்கி தூய அருளொழுக்க நெறியில் வாழ்ந்தவர் என்பதை வலியுறுத்தும்.**

சும்மா இரு சொல்லற என ஆணை தந்ததும் அனைத்தும் குகமய மாகவே தோன்றுகின்றது என்று **தன்னை முருகப் பெருமானின் திருவுள்ளம், விரும்ப நெறிப்படுத்திக் கொண்டவர் அருணகிரி** ( 5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 14. குகசம்பு, செ.10) என்று பாம்பன் சுவாமிகள் போற்றுகின்றார்.

மாதர் பொருட்டுப் பொருள்தேடி அலைந்து அடியேன் துன்புற மாட்டேன். இப்பொழுதே வந்து அருள்புரிவீர் என்று அருணகிரிநாதர் செந்தில்மேவிய கந்தவேளிடம் வேண்டுகின்றார் (வெங்காளம்பர எனத் தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழ்).

**முருகன் அருளால் திருப்புகழ் பாடுதல்**

முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்ற அருணகிரிநாதரைத் "**திருப்புகழ் பாடுக**" எனப் பணித்தார். அருணகிரிநாதர் "நான் எவ்வாறு பாடுவேன்?" என பிரானின் திருவடி வணங்கி வேண்டினார். முருகப்பெருமான் "**முத்தைத் தரு பத்தித் திருநகை**" என அடிஎடுத்துக் கொடுத்து அருளினார்.

மெய்ப் பொருளையே எப்போதும் விழைவோய் ! நிலைபேற்றுக்கு உரியோய் !. சந்தமணம் கமழும் திருப்புகழ் பாக்களைப் பாடுமாறு "முத்தைத் தரு" என அடியெடுத்துக் கொடுத்த குகப்பெருமானைத் தவிரவேறு ஒரு தெய்வத்தையும் வாழ்த்தாத உறுதிப்பாடான கொள்கையுடைய அருணகிரிநாதப் பெருமானுக்கு உற்ற நோயின் வீரியத்தைப் போக்கி அழியாமல் என்றைக்கும் நிலைத்திருக்கும் குகானந்த முக்திப் பேற்றை வழங்கிய கருணை வள்ளலாகிய குகேசனிடம் உனது உள்ளத்தை முழுமையாக ஒப்படைத்து அவனோடு இரண்டறக் கலந்து என்றும் வாழ்ந்திடு என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். ( 5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 35. மெய்யான், செ.10). இப்பாடல் உணர்த்தும் செய்திகள் பின்வருமாறு.

1. திருப்புகழ்ப் பாடல்கள் சந்தமணம் கமழ்பவை.
2. "முத்தைத் தரு " என அடி எடுத்துக் கொடுத்தவர் முருகப்பெருமான்.
3. முருகப் பெருமானையே வாழ்த்தும் உறுதிப்பாடான கொள்ளையுடையவர் அருணகிரிநாதர்.
4. அருணகிரிப் பெருமானுக்கு உற்ற நோயைக் குணப் படுத்தியவர் குகநேசன்.
5. அழியாமல் என்றைக்கும் நிலைத்திருக்கும் முக்திப் பேற்றை அருணகிரிநாதருக்கு வழங்கியவர் முருகப்பெருமான்.

நின்னையன்றி பிற தெய்வத்தை துதியேன் என்று அருணகிரி நாதர் கூறுகின்றார் ( கந்தரனுபூதி, செ.86). இறைவனே உன்னை அன்றி எனக்கு வேறு புகலிடம் இல்லை. அதனால் என்னைக் கைவிடாது காத்தருளவேண்டும் என்கின்றார் அருணகிரிநாதர்.

**"காடும் மலையும் கடலும் உருளச்**
**சாடும் தனிவேலுடையாய் சரணம்**
**ஆடும் மயில் வேலரசே சரணம்**
**பாடும் வர தற்பரனே சரணம்"**

(கந்தர் அனுபூதி, செ.98)

பெரிதும் குகக்கடவுளையே அருணகிரிநாதர் வழுத்தினமையால், பெரிதும் சேயோன் **ஒருவனையே புகழ்ந்த அருணகிரி என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்** ( தகராலய ரகசியம், பாயிரம், செ.4).

**சம்பந்தாண்டானோடு வாது செய்தல்**

முருகப் பெருமானின் தனி அடியாராகவும், பெருந்தவ சீலராகவும் அருணகிரிநாதர் விளங்கினார். இவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. அக்காலத்தில் அருணகிரியில் சம்பந்தாண்டான் என்னும் பெயரை உடைய ஒருவன் இருந்தான் அவன் சமண சமயத்தைச் சேர்ந்தவன் ஆயினும் தேவியின் வரப்பிரசாதம் பெற்றிருந்தான். அக்காலத்தில் திருவண்ணாமலைப் பகுதியைப் பிரபுடதேவ மகராஜன் ஆண்டு வந்தான். அருணகிரி

நாதரும், சம்பந்தாண்டானும் பிரபுடதேவராயனுக்கு மிக நெருங்கியவர்களாய் இருந்தனர். சம்பந்தாண்டான் நாளும் புகழ் ஓங்கும் அருணகிரி நாதர் மீது பொறாமை கொண்டான். அவருக்கு இன்னல் விளைவிக்கக் கருதினான். எனவே அரசரிடம் சென்று "யான் தேவியை நேரே அழைத்து உமக்குத் தரிசனம் தரச் செய்விப்பேன் " என்றும், அவ்வாறே முருக வேளையும் அழைக்கும்படி அருணகிரி நாதரைத் தாங்கள் கேட்க வேண்டும் என்றும் கூறித் தூண்டினான்.

அவ்வாறு அழைக்கத் தவறினால் அவர் நகரினைவிட்டு வெளியேறி விடவேண்டும் என்றும் நிபந்தனை செய்து வாதிடலானான், சம்பந்தாண்டான் பலவாறு தெய்வத்தை வேண்டியும் இறைவன் அருட்காட்சி தரவில்லை. அருணகிரிநாதர் அன்புடன் முருக வேளைச் சிந்தித்து.

**"அதல சேடனாராட அகில மேரு மீதாட**
**அபின காளி தானாட அவளோடன்**
**அதிர வீசி வாதாடும் விடையில் ஏறு வாராட**
**அருகு பூத வேதாளம் அவையாட**
**மதுரவாணி தானாட மலரில் வேதனாராட**
**மருவுவானுளோர் ஆட மதியாட**
**வனச மாமியாராட நெடிய மாமனார் ஆட**
**மயிலும் ஆடி நீயாடி வரவேணும்**
**கதைவிடாத தோள் வீமன் எதிர்கொள் வாளியால் நீடு**
**கருதலார்கள் மாசேனை பொடியாகத்**
**கதறு காலி போய் மீள விஜயன் ஏறு தேர் மீது**
**கனகவேத கோடூதி அலைமோதும்**
**உததி மீதி லேசாயும் உலக மூடு சீர்பாத**
**உவண மூர்த்தி மாமாயன் மருகோனே**
**உதய தாம மார்பான ப்ரபுடதேவ மாராஜா**
**உளமு மாட வாழ்தேவர் பெருமாளே "**

என்ற திருப்புகழை அருணகிரிநாதர் பாடினார்.

முருகப்பெருமான் அருணாசல வடகோபுர தம்பத்தில் மயில் வாகனத்தில் அமர்ந்து காட்சியளித்தார். அத்தரிசன மூர்த்திதான்

“கம்பத்து இளையனார்” என்று அண்ணாமலையில் போற்றி அழைக்கப்படுகின்றார். உண்மையான அன்பிற்கு இறைவன் கட்டுப்படுவான் அல்லவா ? அரசனும் அருட்காட்சியைக்காண விரும்பினார். கண்ணொளி நீங்கிற்று. பிறகு அருணகிரிநாதர் திருநீறு மந்திரித்து அளிக்க பார்வை உண்டாயிற்று. எனவே தோல்வியுற்ற சம்பந்தாண்டான் நகரினின்று நீங்கினான்.

**தலயாத்திரை**

அருணகிரிநாதர் சைவசமயக் குரவர்களைப் போல தலயாத்திரை செய்து முருகப் பெருமானுடைய திருப்புகழைப் பரப்பிட விரும்பினார். திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர், திருவெண்ணெய் நல்லூர் சென்று முருகப் பெருமானைத் தரிசித்தார். முருகப் பெருமான் தம்முடைய அற்புதமயில்மீது திருநடன தரிசனம் தந்தார். அவர் அக்காட்சியைக் கண்டு

**“திருவெண்ணெய் நற்பதி புகழ்பெற அற்புத மயிலின் மிசைக்கு ஒரு திருநடம் இட்டுறை பெருமாளே”**

என்று போற்றித் துதித்துப் பாடியுள்ளார், பிறகு திருநாவலூர், திருவாமூர், வடுகூர், துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப் புலியூர், திருமாணிக்குழி முதலான தலங்களைத் தரிசித்துத் தில்லையம்பதி சென்றடைந்தார்.

**தில்லையில் ஆடற்காட்சி காணல்**

அங்கு நடராசப் பெருமானே முருகராகவும், முருகப் பெருமானே நடராசப் பெருமானாகவும் அவருக்கு அருட்காட்சி நல்கியதை “**அவகுணவிரகனை**” என்று தொடங்கும் திருப்புகழ் பாடலில்,

**“அரிதுயில் சயன வியாள மூர்த்தனும்**
**அணிதிகழ் மிகு புலியூர் வியாகரனும்**
**அரிதென முறை முறை ஆடல் காட்டிய பெருமாளே”**

எனக் குறிப்பிட்டுள்ளார்,

பின்பு அருணகிரிநாதர் முதுகுன்றம், கூடலை ஆற்றூர், எருகத்தம் புலியூர், கடம்பூர், மயேந்திரப்பள்ளி முதலிய

தலங்களைத் தரிசித்துவிட்டுச் சீர்காழி தலத்தை வழிபட்டு மண்ணிப்படிக்கரைத் தலத்திற்கு வந்தார்.

**வயலூர் முருகன் அருளால்**

முருகப்பெருமான் அருணகிரிநாதர் கனவில் தோன்றி வயலூருக்கு வருமாறு பணித்தார். வயலூர்ப் பெருமானை வழிபடும் ஆசையால் உந்தப்பட்டு, வைதீஸ்வரன் கோயில், திருக்கடவூர், திருவிடைக்கழி முதலான தலங்களை வழிபட்டு விட்டு வயலூர் சென்றடைந்தார். வழியில் சுவாமிமலையில் அருணகிரியாருக்கு முருகவேளின் பாததரிசனம் கிடைத்ததை,

**"தகையாது எனக்கு உன் அடிகாண வைத்த**
**தனி ஏரகத்தின் முருகோனே"**

என்ற அருணகிரிநாதர் வாக்கால் அறியலாம். வயலூர் அருணகிரி நாதருக்கு மிகவும் உகந்த தலம். அங்குள்ள பொய்யாக் கணபதியின் அருள் பெற்று அவர் முருகப் பெருமானிடம் பற்பல பேறுகளை அடைந்தார். அங்கே ஒருநாள் முருகப் பெருமானின் திருவடி காணும் பேறு பெற்றதை,

**"வயலி நகரியில் அருள்பெற மயில்மிசை**
**உதவு பரிமள மதுகர வெகுவித**
**வனச மலரடி கனவிலும் நனவிலும் மறவேனே"**

என்று பாடியுள்ளார். அருணகிரிநாதர் பிற தலங்களில் பாடியுள்ள திருப்புகழ்களிலும் வயலூர் முருகனைக் குறிப்பிட்டுள்ளார். "**நாத விந்து கலாதீ** " எனத் தொடங்கும் திருவாவினன் குடித் திருப்புகழில்,

**"ஏம்தலம் புகழ் காவேரியால் விளை**
**சோழ மண்டல மீதே மனோகர**
**ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா**

என்று பாடியுள்ளது நினைவு கூரத்தக்கது.

**விராலிமலை முருகன் அருளல்**

வயலூரில் அருணகிரி நாதருக்குக் காட்சி கொடுத்த முருகன் அவரை விராலிமலைக்கு வரச்சொன்னார். வழி தெரியாது திகைத்த

அருணகிரி நாதருக்கு முருகப் பெருமான் வேடன் உருவில் வந்து வழிகாட்டி விராலி மலைக்கு அழைத்து வந்ததாக வரலாறு. இத்தலத்தில் முருகப் பெருமான் அருணகிரி நாதருக்கு அட்டமாசித்தி வழங்கியுள்ளார்.

**சென்னிமலை முருகன் அருளல்**

பின் அருணகிரி நாதர் விராலிமலையிலிருந்து, கடம்பந்துறை, இரத்தினகிரி என்னும் வாட்போக்கி, கருவூர், சென்னிமலை சென்று வழிபட்டார். சென்னிமலை முருகன் அவருக்குப் படிகாசு அருளினான் என்பதை,

**"நாட்டில் அருணகிரிநாதன் திருப்புகழ் சொல்**
**பாட்டின் மகிழ்ந்து படிக்காசு அளித்தபிரான்**
**தாலமிகுஞ் சென்னிமலை தன்னில் வளர்கல்யாண**
**வாலசுப்பராயன் என்று வாணர்புகழ் வாசலினான்"**

(சென்னிமலையாண்டவன் காதல்)

என்ற நூல் தெரிவிக்கின்றது.

**திருச்செந்தூர் முருகனைக் காணல்**

அருணகிரிநாதர் மதுரை, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை முதலிய தலங்களை வழிபட்டு திருநெல்வேலி சென்று பின்னர் திருச்செந்தூர் சென்றார். அவர் சென்ற சமயம் மாசிமாதம், திருச்செந்தூரில் பிரமோத்சவம், ஏழாம் திருநாள். அன்று மாலையில் தங்கச்சப்பரத்தில் பெருமான் எழுந்தருளி பவனி வருகின்றார். இந்த அற்புதக் காட்சியை அருணகிரிநாதர் கண்டு மகிழ்ந்து முருகா! என்னே உன் திருக்கோலச்சிறப்பு! இரு கண்கள் போதுமா? எண்ணிலாத கண்கள் இல்லையே "எந்தாய்! இத்துணைத் திருவாபரணங்களைப் புனைந்து காணக்காண தெவிட்டாத காட்சியுடன் விளங்குகின்றாய். இப்படியே சிறிது நடித்தருளும். உமது திருநடனம் காண விழைகின்றேன். கருணைபுரியும்" என்று வேண்டினார். ஆறுமுகக் கடவுள் அருணகிரிநாதரைப் பின்புறம் வரச்செய்து, **திருநடனம் புரிந்து நடனக்காட்சித் தந்து அருள் புரிந்தார்.**

**“தண்டையணி வெண்டயங் கிண்கிணி சதங்கையும்**
**தண் கழல் சிலம்புடன் கொஞ்சவே நின்**
**தந்தையினை முன்பரிந்து இன்பவுரி கொண்டு நன்**
**சந்தொடம் அணைந்து நின்ற அன்புபோலக்**
**கண்டு உற கடம்புடன் சந்த மகுடங்களும்**
**கஞ்சமலர் செங்கையும் சிந்துவேலும்**
**கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும்**
**கண்குளிர என்றமுன் சந்தியாவோ**
**புண்டரிகர் அண்டமும் கொண்ட பகிர் அண்டமும்**
**பொங்கி எழ வெம்களம் கொண்டபோது**
**பொன் கிரி என அம் சிறந்து எங்கினும் வளர்ந்துமுன்**
**புண்டரிகர் தந்தையும் சிந்தைகூரக்**
**கொண்ட நடனம் பதஞ்செந்திலிலும் என்றன் முன்**
**கொஞ்சி நடனம் கொளும் கந்தவேளே**
**கொங்கை குற மங்கையின் சந்த மணம் உண்டிடும்**
**கும்பமுனி கும்பிடும் தம்பிரானே**

என்ற திருப்புகழை அருணகிரிநாதர் பாடினார்.

**பெருமானின் நடன அலங்காரத்தை ஏழாம் திருவிழா மாலையில் தங்கச்சப்பரத்தில் எழுந்தருளும் போது பின்புறத்தில் இன்றும் தெரிசிக்கலாம்.**

### வில்லிப்புத்தூராரோடு வாது செய்தல்

வில்லிப்புத்தூரார் திருமுனைப்பாடி நாட்டுச் சனியூரில் பிறந்தவர். சந்தப் பாடல்களை மிகுதியாகப் பாடியவர். வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இவரைப்பற்றியும் உண்மைக்குப் புறம்பான கதைகள் வழங்குகின்றன. அவற்றில் ஒரு கதை பின்வருமாறு. ஆண்டான் பிள்ளை என்ற அரசன் வில்லிப்புத்தூராரைப் பாரதம் பாட வேண்டினான். அவரும் பாரதம் பாடி முடித்தார். அரசன் புலவருக்குப் பரிசுதர முன்வந்தபோது அவர் “என்னிடம் சந்தப் பாடல் பாடுவதில் போட்டியிட்டுத் தோற்ப்பவர் காதை அறுக்கும் அதிகாரமும், அதற்கு அடையாளமாக ஒரு வாளும் தருக” எனக் கேட்டுப் பெற்றார். வில்லிப்புத்தூரார் வாதில் தோற்ற பலர் காதுகளை அறுத்தார்.

அருணகிரிநாதர் ஈழ நாட்டுத் தலங்களை வழிபடச் சென்ற போது, வில்லிப்புத்துராரிடம் வாது செய்ய நேர்ந்தது. அப்போது ஆசுகவியாக அருணகிரிநாதர் பாடிய நூல் கந்தரந்தாதி ஆகும். அருணகிரியாரின் ஒவ்வொரு பாட்டுக்கும் பொருள் சொல்லி வந்த வில்லிப்புத்தூரார் 54 ஆம் பாடலான "திதத்த " எனத் தொடங்கும் செய்யுளுக்குப் பொருள் கூற முடியாமல் திகைத்துத் தோல்வி யுற்றார். அச்செய்யுளுக்குப் பின்னர் அருணகிரி நாதரே உரை அருளினார். வாதில் தோற்றவர் காதை அறுக்கவேண்டும் என்பது நியதி. ஆனால் அருணகிரிநாதர் அவ்வாறு செய்யாது விடுத்ததோடு, "இனிக் கருணைக்கு விரோதமான இவ்வழக்கத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும்" என்று கூறி வில்லிப் புத்தூராரின் கையிலிருந்த குறடை வீசி எறியச் செய்தார். அதனாலேயே **கருணைக்கு அருணகிரி** எனப் போற்றப்பட்டார். "**கருனை பெருகு அருணகிரி கவிகளில் அமர்ந்த பரம புனிதனே**" (1.20. பூரணானந்த குகன், செ.10) என்றும், "**கருணைமிகுந்த அருணகிரிப் பெருமான்** அருளிய திருப்புகழ்ப் பாடல்களில் அவற்றின் பொருள் மயமாக விளங்கும் பரமனே! புனிதனே! என்று முருகப் பெருமானைப் போற்றும் வாயிலாக அருணகிரிநாதரின் கருணையைப் போற்றுகின்றார் சுவாமிகள். "**நிறை கருணை அருணகிரி புகழ் பெரிய தெய்வமே**" (1.16. நிட்களானந்தகுகன், செ.10) என்று சுவாமிகள் போற்றுகின்றார். அருணகிரிநாதர் வில்லிப்புத்தூராரை வென்ற செய்தி புலவர் பலரால் போற்றப் படுகின்றது.

வில்லிப்புத்தூர் ஆழ்வாரின் அகந்தை அடியோடு அழியத் தமது கல்வித் திறத்தால் வென்று, அரிய வேண்டிய செவியை அரியாமல் அவருக்குச் செவியளிந்த **கருணை முனிவராகிய அருணகிரி** என பாம்பன் சுவாமிகள் பாராட்டுகின்றார் (5.திருப்பா, இரண்டாம் புத்தகம், 70. மாணிக்கவாசகர், செ.10)

**"வில்லிப் புத்தூர்ப் பெயரானது வீறிறக்**
**கல்லியினால் வென்று காது அளித்தான் உடை**
**நல்ல ருட்பா பொருளே அருள் நாயக**
**அல்லவை மாய்த்து உய்யுமாறு எனக்கு அருளே"**

என்பது பாடலாகும்.

## ஈழ நாட்டு யாத்திரை

அருணகிரிநாதர் ஈழநாட்டுத் தலங்களான கண்டியையும், திருக்கோண மலையையும், கதிர்காமத்தையும் தரிசித்தார்.

## தமிழக யாத்திரை

பிறகு தமிழகம் வந்த அருணகிரி நாதர் பாபநாசம் பெரியமலை முதலாக திருப்பெருந்துறை ஈறாக உள்ள பல தலங்களையும் கண்டு வழிபட்டார். திருப்பூந்துருத்தியில் முருகப் பெருமான் அவருடைய திருத்தோளில் வேற்பொறியையும், மயில் பொறியையும் பொறித்தார்.

## தொண்டை நாட்டு யாத்திரை

திருவண்ணாமலைக்கு மீண்டும் வந்த அருணகிரிநாதர் திருவா மாத்தூர், திருவக்கரை, மயிலம், சேயூர், உத்திரமேரூர், திருக்கழுக் குன்றம், திருப்போரூர், காஞ்சி, திருவோத்தூர், கோடைநகர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருவொற்றியூர், வட திருமுல்லை வாயில், திருவேற்காடு, திருவாலங்காடு, வேப்பூர், தேவனூர், வேலூர், விரிஞ்சிபுரம், திருவலம் முதலிய தலங்கட்குச் சென்று அம்மலையை வலம் வந்து மகிழ்ந்து பாடினார்.

## திருத்தணிகை தரிசனம் காணல்

பல நாள் திருத்தணியில் தங்கி முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடினார். உனது தண்டையந்தாள்களைச் சூடாத சென்னியையும், நாடாத கண்களையும், பாடாத நாவையும், எனக்கென்றே தெரிந்து பிரமதேவன் அமைத்தனனே.

> **“கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம் என்ன**
> **குன்றெிந்த**
> **தாடாளனே தென் தணிகைக் குமர நின் தண்டையந்தாள்**
> **சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்**
> **பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே ”**

(கந்தர் அலங்காரம், செ.76)

என்று வருந்திப் பாடுகிறார்.

அருணகிரி நாதருக்குத் திருத்தணி முருகப்பெருமான் தன் தேவியர்களுடன் மயில்மீது நடனதரிசனம் காட்டியருளினான். இதனை

**“அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே ”**
**“விண் அமரர் கொடுத்திடும் அரிவை குறித்தியொடு**
**திருத்தணிமலையில் நடித்தருள் பெருமாளே ”**
**“தணிகை மலை தனில் மயிலில் நிர்த்தத்தில்**
**நிற்கவல பெருமாளே ”**

என்னும் திருப்புகழ்த் தொடர்களால் அறிய முடிகிறது.

**வடநாட்டு யாத்திரை**

தணிகைப் பிரானின் அருளால் திருவருள் தீக்கை பெற்ற அருணகிரிநாதர் அங்கிருந்து புறப்பட்டு வெள்ளிகரம், திருவேங்கடம், திருக்காளத்தி, திருப்பருப்பதம், காசி முதலான தலங்களில் முருகனை வழிபட்டு கடைசியாக திருவண்ணாமலைக்கும் திரும்பி அங்கேயே தங்கி வாழலானார்.

**கிளி வடிவம் பெறல்**

முன்னர் வாதில் தோற்ற சம்பந்ததாண்டானின் சூழ்ச்சிக்கு உட்பட்ட மன்னன் அருணகிரியாரை விண்ணுலகு சென்று பாரிஜாத மலரைத் தனக்குக் கண்ணொளி கிடைக்கக் கொண்டுவர ஏவினார். அருணகிரிநாதர் தம் உடலை அருணகிரிக் கோபுரத்தில் பத்திரப் படுத்தி வைத்து விட்டு, உயிரற்ற ஒருகிளி உடலில் புகுந்து விண்ணுலகு சென்று பாரிஜாத மலரைக் கொண்டு வந்தார். அதை அறிந்த சம்பந்தாண்டான் சதி செய்து அருணகிரியாரின் உடலைத் தீயிலிட்டான். அருணகிரிநாதர் கிளியுருவில் இருந்து கொண்டு கந்தர் அனுபூதி பாடினார் என்பவையாவும் புனையப்பட்ட கதையாகும் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். அருணகிரி நாதர் பரகாயப் பிரவேசம் செய்யத் தேவையில்லை. நினைத்த மாத்திரத்தில் விரும்பிய வடிவம் கொள்ளும் ஆற்றலைக் குமாரக் கடவுள் அவருக்கு வழங்கியிருந்தார்.

“துகளில் சாயுச்சியக் கதியை ஈரற்ற சொற்
சுகரூபத்தை உற்று அடைவேனோ” என்றும்,
“பரவசந் தணிந்து உனைஉணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில் தரும் சுக
பதம் அடைந்திருந்து அருள் பொருந்தும் அது ஒருநாளே ”

என்ற திருப்புகழ் தொடர்களில் சுகம் என்பதற்குக் கிளியென்று பொருள் கொண்டதன் விளைவே கிளிக்கதை. **சுக சொரூபம் என்பது இறைவனோடு இரண்டறக் கலக்கும் அத்துவித நிலையாம்.**

**“இருவினையும் மும்மலமும் அற இறவியொடு பிறவியற**
**ஏக போகமாய் நீயும் நானுமாய்**
**இறுகும் வகை பரமசுகம் அதனை அருள்”**
(அருகுநுனி – திருப்புகழ்)

என்று அத்துவிதநிலையை அருணகிரிநாதர் விளக்குகிறார். (கு.வெ.பாலசுப்பிரமணியன், அருணகிரியார், ஞானபரம்பரை தொகுதி 4. பக்.25-26).

**முக்தி பெறுதல்**

அருணகிரிநாதர் திருவாதவூரைப் போல் திருவண்ணாமலையில் சிதாகாசப் பெரு வெளியில் மறைந்தருளினார் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். (அ.கிருஷ்ணஸ்வாமி மஹாதேஜோ மண்டல சபையின் முன்னாள் தலைவர், சுவாமிகளின் அறிமுகம், ப.19).

**“அருணகிரி நாதருக்குப் பரகதி அருளிய அறிவுக்கடலே”**
(1.23. சரவணபவன், செ.10)

**புகமுடன் முருகப் பெருமானின் திருவடியை அடைந்த**
**ஒப்பற்ற ஞானி அருணகிரிநாதர்** (1.35.மனது, செ.10

**“அருணகிரிநாதர் பேரின்பம் அடையும்படி அருளியவன்**
**அடியேன் வணங்கும் ஆறுமுகச் சிவபெருமானே”**
( 1.39. கந்தர் திருவாரம், செ.36 )

“பேரின்ப முக்தியை அறிந்தருளும் குகப் பிரமத்தை வணங்கி **முக்திப் பேற்றை அடைந்த அருணகிரிநாதரின்** இரண்டு திருவடிகட்கு அன்பு செய்திடும் அடியார் மேலான கதியை அடைவர் (1. சமாதான சங்கீதம்) எனக் கூறும் பாம்பன் சுவாமிகள் வாக்குகள் இங்கு நினைவுகூரத்தக்கன.

சென்னை புதுப்பாக்கம் என்னும் குமாரபுரம் சிவசுப்பிரமணிய பக்த ஜன சபாமண்டபத்தில், பாம்பன் சுவாமிகள் காளயுத்தி வருடம் ஆனி மாதம் 11 ஆம் நாள் (24-6-1918) இல் அருணகிரிநாதரின் தூய சரித்திரத்தை எடுத்தியம்பினார்.

அருணகிரிநாதரின் திவ்விய திருமேனியானது 35-40 வயதுடைய கௌபீனதாரியாக அன்பர் ஒருவர் கனவில் காட்சியான செய்தியைச் செவி மடுத்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அதை ஆமோதித்து ஒரு வண்ண ஓவியமாகத்தீட்டி, சென்னை குமாரபுரம் சிவசுப்பிரமணிய பக்த ஜன சபா மண்டபத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

ஸ்ரீமத் அருணகிரி நாதரின் குருபூஜை தினத்தை உத்திரா யணத்து ஆறாம் நிறைமதி நாள் என நிர்ணயம் செய்து, அவ்வாறே அவ்விழா பிரதி வருடம் ஆனிமாத பௌர்ணமி திதியில் கொண்டாடப்பட வேண்டுமென்று பாம்பன் சுவாமிகள் கூறியபடி இவ்விழா நடைபெற்று வருகின்றது.

**சான்றோர்களின் பாராட்டுக்கள்**

அருணகிரிநாதரின் காலத்திற்குப் பின் தோன்றிய அருளாளர் கள் பலர் அருணகிரிநாதரைப் பாராட்டியுள்ளார்கள்.

**“கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன**
**எந்தை அருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ ”**
(எந்நாற்கன்னி, அடியவர் வணக்கம் 8)

**“ஐயா அருணகிரி அப்பா உனைப்போல**
**மெய்யாக ஓர் சொல் விளம்பினார் யார் ”**
(உடல் பொய்யுறவு, 26)

என்று தாயுமானவர் பாராட்டியுள்ளார். மேலும் அந்தகக்கவி வீரராகவ முதலியார், வரகவி மார்க்க சகாயத் தேவர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீகந்தப்ப தேசிகர், வடலூர் இராமலிங்க அடிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார், அருட்கவி சாதுராம் சுவாமிகள் போன்றோர் அருணகிரிநாதரைப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

## 2. அருணகிரிநாதர் பெற்ற சிறப்புப் பெயர்கள்

சார்ம பௌண்டிம கவி, அஷ்டபாஷா பரமேஸ்வர், சந்தப் பாவலர் பெருமான், நாற்கவிராஜன், முத்தமிழ் அரசர், நவரச நாவலர், சந்தக்கவித்தலைவர், தாளச் செல்வர், இசை ஞானியார், திருப்புகழ் பாவகை ஆதி கர்த்தா முதலிய சிறப்புப் பெயர்கள் அருணகிரி நாதருக்கு வழங்கப் பெற்றுள்ளன (வேல், கார்த்திகேயன், அருணகிரிநாதர், சாகித்திய அகாதெமி வெளியீடு, முதல் பதிப்பு, 2010, ப.25 ). பக்க எல்லை கருதிப் பாம்பன் சுவாமிகள் வரலாறு இங்குக் கூறப்படவில்லை. அவரது வரலாறு அடியேன் எழுதிய பாம்பன் சுவாமிகளின் பெருமை என்ற நூலில் (சைவ சித்தாந்தப் பெருமன்ற வெளியீடு ) கூறப்பட்டுள்ளது. ஆயினும் இந்நூலின் 3வது இயலில் அருணகிரிநாதரின் வரலாற்றுடன், பாம்பன் சுவாமிகளின் வரலாறு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

## 2. அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள்

அருணகிரிநாதர் திருப்புகழ், திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவை அருளிச் செய்துள்ளார். இனி இந்நூல் களைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

### திருப்புகழ்

முருகப் பெருமானுடைய சிறப்புக்களைப் போற்றும் நூல்களுள் திருப்புகழ் தனிச்சிறப்புடைய தாகும். திருவண்ணாமலையில் முருகப் பெருமான் அருணகிரி நாதரைத் "திருப்புகழ் பாடுக" எனக் கட்டளையிட்டார் இதனை,

"**திருப்புகழ்விருப்பமொடு செப்பு என**
**எனக்கு அருள்கை மறவேனே** "

என்று அருணகிரி நாதரே கூறுகின்றார். திருப்புகழில் மொத்தப் பாடல்கள் 16, 000 என்பர். ஆனால் தற்போது நமக்குக் கிடைத்துள்ளவை 1324 பாடல்களே. பாம்பன் ஸ்ரீமத் குமாரகுரு தாச சுவாமிகள் தம் நூல்களில் பல இடங்களில் அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழ் பாடல்களை அருளிச் செய்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

முருகப் பெருமானைப் போற்றும் முறையில், சுவாமிகள் பதினாறாயிரம் பாடல்களை அருணகிரி நாதர் அருளியதைக் குறிப்பிடுகின்றார்.

"**பதினாயிரம் புகழ்ப்பா படித்தவர்க்கு அருளிய**
**அப்பனே ! ஒப்பில்லாதவனே !**" என்கிறார்

(2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 16. அடிமை, செ.10).

"தமிழிற் பயில் புகழ் **சோடச நூறு தசம்** பன்னிய அறிஞனை ஆளடிமை தயவுடன் கொண்டது போல என்னையும் தடையறக் கொண்டிரு " என்கின்றார் பாம்பன் சுவாமிகள் (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 18. திருத்தோத்திரம், செ.10 ). சோடச நூறு தரிசனம்- 1000 எனப்பொருள்.

“**பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்களைப்** பாடி அருளிய அருணகிரிப் பெருமானின் இதயத் தாமரையில் எழுந்தருளிய முழுமுதற்பொருளே” (5.திருப்பா, இரண்டாம் புத்தகம், 8. ஆனந்தமயமான பொருள், செ.10) என்கின்றார்.

பல தலங்கட்குச் சென்று அருணகிரி நாதர்
திருப்புகழ்கள் பாடியுள்ளார்.

| தலம் | | பாடல்கள் |
|---|---|---|
| திருப்பரங்குன்றம் | - | 14 |
| திருச்செந்தூர் | - | 84 |
| திருவாவினன் குடி- பழனி | - | 96 |
| திருவேரகம் (சுவாமிமலை) | - | 38 |
| பழமுதிர் சோலை | - | 16 |
| குன்று தோறாடல் (பொது) | - | 7 |
| (சிறப்பு) | - | 198 |
| காஞ்சிபுரம் | - | 44 |
| திருவண்ணாமலை | - | 79 |
| திருவானைக்கா | - | 14 |
| திருக்காளத்தி | - | 8 |
| சிதம்பரம் | - | 67 |

திருப்புகழ் பாடல்கள் சந்தயாப்பில் வடமொழியும், தென் மொழியும் கலந்து பாடப்பட்டுள்ளன.

“**சந்தப்பாவினம் பாடியருளிய அருணகிரிநாதர்** ”

என்று பாம்பன் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்

(1.21. குந்துகால், செ.5) “ **வேதத்திற்கு நிகர் என்று சொல்லப்படும் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிய சந்தக்கவிஞர் அருணகிரி**”

(5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 58. நெஞ்சம், செ.10) என்றும்,

அரிய சந்தத் திருப்புகழ் பாடல்களைப் பெருமழை எனப் பொழிந்த எம்மானாகிய அருணகிரிநாதர் (5. திருப்பா இரண்டாம்

புத்தகம், 69. வேதா, செ.10) என்றும் பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். சந்தப் பாக்கள் பாடிய திருப்புகழ்க் குருவாகிய அருணகிரிப் பெருமான் உள்ளம் கசிந்து உருகித் தியானித்திருந்த தகராலயக்குகப் பரம்பொருளே என பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

(5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 92. பொன் மஞ்சள், செ.10)

முருகப் பெருமானின் பல்வேறு சிறப்புக்களும், வடிவழகும், கருணைத்திறமும் திருப்புகழ்களில் போற்றப்பட்டுள்ளன. திருப் புகழ்களில் நீதிமொழிகள் பலவும், அறிவுரைகள் பலவும் கூறப் பட்டுள்ளன. அருணகிரிநாதரின் வரலாற்றுக்கான அகச்சான்றுகள் பல திருப்புகழ்களில் உள்ளன (அவை அருணகிரிநாதரின் வரலாறு என்ற முந்தின அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன).

திருப்புகழ்ச் சந்தச் செறிவுடன் சிந்தைக்கு இனிமை பயப்பதாய் தேனினும் இனியதாக தித்திப்பது.

**"உதிரும் கனியை நறும்பாகில் உடைத்துக்**
**கலந்து தேனை வடித்து**
**ஊற்றிஅமுதின் உடன் கூட்டி ஒக்கக்**
**குழைத்த ருசி பிறந்து**
**மதுரம் கனிந்த திருப்புகழ்ப் பாமாலை"**

(திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்) என்ற பாடல் திருப்புகழின் சிறப்பை உணர்த்தும்.

தேனூறும் தித்திக்கும் செந்தமிழால் பாடிய தமிழ் மறை திருப்புகழ் ஆகும். இத்தமிழ் வேதம் பரகதிக்கு ஏணி. அருட்கடலுக்கு ஏற்றம், மனத் தளர்வுக்கு ஆனி. பிறவி மாசறுக்கும் அரம் (தகராலய ரகசியம், பாயிரம் செ.4 இன் சதானந்த சாகரம் உரை, ப. 13).

## திருப்புகழைப் படிப்பதால் உண்டாகும் பயன்கள்

திருப்புகழைப் படிப்பவர்க்கு இடுக்கண் உண்டாகாது
**"இருப்ப வல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்**
**இடுக்கினை அறுத்திடும் என ஓதும் - திருப்புகழ்"**

திருப்புகழைப் படிக்கும் மெய்யன்பர்கட்கு சத்துரு பயம் இல்லை. அவரைப் பகைக்கும் வன் கணரை வேலாயுதம் விரைவில் அழித்துவிடும்.

“ **சொலற்கரிய திருப்புகழை உரைப்பவரை அடுத்த பகை**
**அறத் தெறிய முறுக்கி எழும் அறத்தை நிலை காணும்**”
(வேல் வகுப்பு)

“**திருப்புகழைக் கற்பார்க்கு சித்தி எட்டு எளிதாமே**”
(கந்தப்ப தேசிகர்)

“ **தோத்திரமாகத் துதிக்கும் திருப்புகழை**
**ஏத்தினவர் ஈடேறுவார்** ”

போன்ற பாடல் தொடர்கள் திருப்புகழை ஓதுவார்கள் அடையும் பலன்களை உணர்த்துவன. ( அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறுவார்களாக).

திருப்புகழின் வாக்கினிமை பலரையும் ஈர்க்கின்றது. சந்தமிகும் திருப்புகழ்ப் பாடல்களைத் தங்கு தடையின்றி மடை திறந்த வெள்ளம் போல பாடிய தனிச்சிறப்பால் “**வாக்கிற்கு அருணகிரி**” எனப் போற்றப்பட்டார்

“**வாக்குத் திறம் நன்கு வாய்ந்த அருணகிரிப் பெருமான்** ”

(5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 83. தோலுயர்தயித்திரியம் செ. 10) என்று பாம்பன் சுவாமிகள் போற்றுகின்றார்

## திருவகுப்பு

திருவகுப்பு திருப்புகழைப் போலவே சந்தம் அமையப் பெற்ற பாடல்களைக் கொண்டது. முருகனது பெருமையும், அடியவர்களின் சிறப்பையும் வகுத்துக் கூறுவதால் திருவகுப்பு எனப் பெயர் பெற்றது. இந்நூல் 25 வகுப்புகளைக் கொண்டது. அருணகிரிநாதர் பாடியவை 18 வகுப்புகள் மட்டுமே என்பது ஆறுமுக நாவலர் கருத்தாகும். சீர்பாத வகுப்பு முதலாகச் சிவலோக வகுப்பு வரை உள்ள 18 பாடல்களே அருணகிரிநாதர் அருளியது என்பது ஆன்றோர் கொள்கை.

**“ மட்டிலா வகுப்பை உரைத்தவன் இறைவா**
**மதியியற் சுயம் பெருமாளே ”**

(2.திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 8. திருப்பரங்கிரி, செ.10)

என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். “ உம்பரும் புகழ் வகுப்பு உரைத்தவன்” (2.திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 10. திருவேரகம், செ.10) என்று சுவாமிகள் போற்றுகின்றார்

**திருவகுப்பு என்னும் திருமுறை அருளிய நாவன்மை மிக்க அருணகிரிப் பெருமானின்** தோத்திரத்திற்கு உள்ளம் களித்துள்ள பேரொளியான சுப்பிரமனியமே என்கின்றார் பாம்பன் சுவாமிகள் (5. திருப்பா, இரண்டாவது புத்தகம், 42. ஞானதெய்வம், செ.10).

**சீர்பாத வகுப்பு**

இவ்வகுப்பே மிகப் பிரதானமானது. ஏனெனில் முருகரினும் சிறந்தது அவருடைய சீர்பாதம் என்பது,

**“நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை ”**

என்ற பரிபாடலால் அறியப்படும். சீர்பாதவகுப்பு முருகப் பெருமானின் திருவடிச் சிறப்பைப் போற்றுகின்றது. இவ்வகுப்பு ஞானத்தை அளித்து யமபயத்தைப் போக்கக் கூடியது. வினைப் பயனை அழித்துப் பேரின்ப வாழ்வளிக்கும் சிறப்புடையது.

**“முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறு கொடு**
**முதுவடைவை விழிசுழல வருகால தூதர்கெட**
**முடுகுவதும் அருள் நெறியில் உதவுவதும் நினையும் அவை**
**முடியவருவதும் அடியர் பகைகோடி சாடுவதும் ”**
(சீர்பாத வகுப்பு , செ.1)

என்று பாடல் தெரிவிக்கின்றது.

**தேவேந்திர சங்க வகுப்பு**

இவ்வகுப்பு பூதப்பிசாசு ஆகிய தீய கொடிய பகைகளையும், யமனையும் வெருட்ட வல்லது.

**வேல் வகுப்பு**

வேலின் பெருமையையும் ஆற்றலையும் கூறுவது எவ்வித ஆபத்தையும் நீக்கி உயிர்க்கு உற்ற துனையாய் நிற்கும் . முருகனடியார்கள் "**வேலும் மயிலும் துணை** "என ஓதுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**திருவேளைக் காரன் வகுப்பு**

முருகப் பெருமானின் புகழையும், அவர் வள்ளியோடு தனது வேளையைக் கழிப்பவன் என்றும் சிறப்பித்துக் கூறும்.

" **விறல்மறவர் சிறுமி திருவேளைக்கார பெருமாளே** "
(ஒரு பொழுதும் – திருப்புகழ்)

என்று அருணகிரிநாதரின் வாக்கு இங்கு நினைவுகூரத்தக்கது.

**பெருத்த வசன வகுப்பு**

முருகப்பிரான் அருணகிரிநாதருக்கு அருளிய உபதேசத்தின் சிறப்பினை இவ்வகுப்பு தெரிவிக்கிறது.

**பூதவேதாள வகுப்பு**

முருகப் பெருமான் சூரபத்மனோடு போரிட்ட பொழுது போர்க் களத்தில் பூதங்கள் ஆடியதை வர்ணிப்பது.

**பொருகளத் தலகை வகுப்பு**

பேய்களின் செயல்களை வர்ணிப்பது.

**செருக் களத் தலகை வகுப்பு**

போர்க்களத்தில் பேய்கள் செய்யும் செயல்களையும், முருகப் பெருமானின் பன்னிருகரங்களையும் வர்ணிப்பது.

**திருஞான வேழ வகுப்பு**

மௌன ஞானத்தின் சிறப்பைப் போற்றுவது.

**திருக்கையில் வழக்க வகுப்பு**

திருத்தணிகைப் பெருமாளின் திருப்புகழைப் பாடுபவர்கட்கு அவர்கள் திருக்கையில் அளிக்கப்படும் பிரசாதத்தின் அளப்பரும் மகிமையைக் கூறுகின்றது.

**வேடிச்சி காவலன் வகுப்பு**

வேடர் மகளாம் வள்ளியின் காதலராகிய முருகப் பெருமானின் சிறப்பைக் கூறுகின்றது.

**சேவகன் வகுப்பு**

முருகப் பெருமானின் பன்னிரு கரங்களின் பெருமையையும், யமதூதர் அழைக்கும் போது வந்து உதவ வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் உணர்த்துவது.

**வேல்வாங்கு வகுப்பு**

முருகப்பெருமான் அம்பிகையிடம் பெற்ற வேலை உபயோகித்து ஆற்றிய அருளிப்பாடுகளைப் போற்றுவது. போர், வெள்ளம், தீ ஆகிய பெரிய ஆபத்துக்களிலிருந்தும் நம்மைக் காக்க வல்ல பேராற்றல் உடையது.

**புயவகுப்பு**

முருகக் கடவுளின் பன்னிரு கரங்களின் சிறப்பும் ஆயுதங்களும், நிகழ்த்தும் அருட் செயல்களையும் கூறுகின்றது. இதில் முதல் 12 அடிகளில் திருமுருகாற்றுப் படையை அப்படியே தழுவி, பின்னர் முருகன் திருப்புயத்தின் சிறப்புக்கள் பலவற்றை எடுத்துக் கூறகின்றது. (பாம்பன் சுவாமிகள் தன் செக்கர்வேள் செம்மாப்பு என்ற நூலில் முருகப் பெருமானின் கையிலுள்ள ஆயுதங் களையும், அவற்றின் தத்துவத்தையும் எடுத்துரைத்து உள்ளார்.)

**சித்து வகுப்பு**

அடியவர்கள் சித்துக்கள் பெறுவதற்குரிய வழிகளையும், இரசவாதம் போன்ற முறைகளையும், 125 வகையான

மூலிகைகளின் மருத்துவ குணங்களையும் போற்றிக் கூறுகின்றது. இவ்வகுப்பு "**வேலும் மயிலும் வாழி**" என்று தொடங்குகின்றது. வேலின் துணையால் வினை நீங்கி பிறப்பு ஒழியும், மயிலின் துணையால் ஆணவம் ஒழியும்.

**கடைக்கண்ணியல் வகுப்பு**

அபிராமி அந்தாதியில் அம்மனின் கடைக்கண் பார்வையால் உண்டாகும் நன்மைகள் கூறப்பட்டிருப்பது போல, இவ்வகுப்பு முருகப் பெருமானின் கடைக்கண் பார்வையால் விளையும் பெருமையைக் கூறுகின்றது. மயில், வேல், முருகப் பெருமானின் கடைக்கண் நோக்கு ஆகியனவற்றைத் தியானித்துப் பெறவேண்டிய பேறுகளைப் பெற உலக மக்களை அழைக்கும் முறையில் அமைந்துள்ளது. இவ்வகுப்பினை திருவருட்பிரசாத வகுப்பு, திருமுருகாற்றுப்படை வகுப்பு என்றும் கூறுவர்.

**சிவலோக வகுப்பு**

அன்பே சிவலோகம் என்பதைப் போற்றிக் கூறுகின்றது பதினாறு பேறுகளைத் தருவதுஇவ்வன்பு என்னும் சிவலோகம் ஆகும். இவ்வகுப்புப் பாடல்களைத் துதிப்பதால் பக்தி பெருகி ஆனந்தக் கடலில் திளைத்து நிற்பர். அருணகிரிநாதர் திருவகுப்பு பாடியது போல் பாம்பன் சுவாமிகள் **சஷ்டி வகுப்பு** அருளிச் செய்துள்ளார். இது 32 சந்த பேதங்கள் அமைந்த 64 அடிகளைக் கொண்ட பாடல். இது சோபகிருது ஆண்டு (1903) ஐப்பசி பத்தாம் நாள் கந்த சஷ்டி விழா அன்று பாடப்பட்ட வகுப்பு. இதை ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் நிகழும் கந்த சஷ்டி விரதநாள் அன்று ஓத வேண்டும்.

**திருஎழு கூற்றிருக்கை**

திருஞான சம்பந்தர் பாடியது போல, அருணகிரி நாதர் திருஎழுகூற்றிருக்கைப் பாடியுள்ளார். இந்நூல் 27 அடிகளை உடையது. இறுதியாக சுவாமிமலை என்றும் முருகத்தலப் பெயருடன் நிறைவுறுகின்றது.

## வேல் விருத்தம்

வேல் விருத்தம் 10 சந்தப்பாக்களை உடையது. இவ் விருத்தம் வேலின் ஆற்றலை விளக்குகின்றது. விநாயகக் காப்புப் பாடல் தனித்துக் கூறப்படாமல் நூலின் முதல் பாடலாக அமைந்துள்ளது. குமரக்கடவுள் விடுத்தவேல், கடலைக் குடித்தவேல், சூரனை அழித்த வீரவேல், செவ்வேட் பரமனது செங்கைவேல். அசுரர்களை அழித்தவேல், எமபயம் தீர்க்கும் வேல், அடியார்க்கு அழிவில்லாத ஆனந்தத்தைத் தரக்கூடியது வேல், இந்திரனுக்கு அரசு தந்ததுவேல். தேவமாதர்களால் புகழ்ப்படுவது வேல். தேவர்களைச் சிறைமீட்டது வேல். முருகப் பெருமானைப் போற்றுகின்ற அடியவர்களில் நாவிலும், அறிவிலும் எழுந்தருளி யிருப்பான்.

" **தானவர் நிணத்தசை அருந்திப் புரந்த வேல்** "
"**புகழும் அவரவர் நாவினில் புந்தியில் அமர்ந்தவன்** "
(வேல் விருத்தம், செ.3)

வேலாயுதம் கொடியவர்க்கு நஞ்சாகவும், அடியவர்கட்கு அமுதமாவும் விளங்குவது. முருகப் பெருமானின் கைவேல் ஒரு நொடியில் ஒரு கோடி அண்டங்களையும், எண்ணற்ற குலமலைகளையும் ஊடறுத்துச் செல்லும் ஆற்றல் உடையது.

" **அண்டங்கள் ஒரு கோடி ஆயினும் குலகிரி**
**அநந்தமாயினும் ஏவினால்**
**அடைய உருவிப் புறம் போது அல்லது தங்கல்**
**அறியாது**" (வேல்விருத்தம், செ.7)

## மயில் விருத்தம்

தோகை விரித்தாடும் பச்சைமயில் முருகப் பெருமானின் வாகனம் ஆகும். பிரணவப் பொருளின் வடிவம் உடையது. அந்த மயில் குறித்துப் பாடிய இவ்விருத்தம் 12 செய்யுட்களை உடையது (காப்புச் செய்யுள் 1, பதிகப் பலன் கூறும் செய்யுள் ஒன்றும் சேர்ந்து).

நடனத்தில் வல்லவரான நடராசப் பெருமானே மயிலின் நடனத்தைக் கண்டு மகிழ்கிறாராம். இது

**“ வேதாள தாளங்கட்கு இசைய ஆடுவார்**
**மிக்கப் பிரியப்பட விடா**
**விழி பவுரி கவுரி கண்டு உள மகிழ விளையாடும்**
**விஸ்தார நிருத்த மயிலாம் ”**

(மயில் விருத்தம், செ.3)

என்ற செய்யுளால் அறியப்படும்.

பெண் மயில் தான் இட்ட முட்டைகளை அணைத்துக் காக்கும். முருகப் பெருமானது மயிலோ எல்ல அண்டங்களையும் தனது சிறகினால் அணைத்துக் காக்கும் பேராற்றல் உடையது.

**“அண்டங்கள் யாவும் கொடுஞ் சிறகினால்**
**அணையும் தனது பேடை அண்டங்கள் என்னவே**
**அணைக்கும் கபால மயிலாம் ”**

(மயில் வகுப்பு, செ.5)

என்கின்றார் அருணகிரிநாதர்.

குமாரக் கடவுள் ஊர்ந்து வரும் பசும்பொன் மயில், சக்ரவாளகிரி கிழிபடவும், கிரௌஞ்சமலை பிளவுபடவும், மகாமேருகிரியும் அஷ்டகுலாசலங்களும் உலகங்களும் குலுங்கவும், ஆதிசேடனது ஆயிரம் பணா மகுடங்களும் அதிரவும், சூரபன்மன் முதலான அசுரர்கள் திடுக்கிட்டு நடுநடுங்கவும் நடனம் ஆடுகிறதாம் என்கிறார் அருணகிரிநாதர் (சக்ரப்ரசண்டகிரி எனத் தொடங்கும் மயில் விருத்தம்).

ஆறுமுகப் பெருமான் அவுணரை வெல்ல போர் செய்யப் புறப்பட்டபோது, மயில் வாகனத்தின் தோகை சிறிது அசைய, அதனால் உண்டான காற்றினால் மேரு அசைந்தது. அது அடிவைக்க குலாசலங்கள் துகள் பட்டன. அத்துகள்களால் கடல் மேடாயிற்று என்று அருணகிரிநாதர் கந்தர்தரலங்காரத்தில் (செ.11) கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

மயில் விருத்தத்தைப் படிப்பவர்கள் அமுதம் உணவாகப் பெற்று மகிழ்வர். ஆயிரம் பிறை தொழும் நிறை ஆயுளைப் பெறுவர். எல்லோராலும் பாராட்டபடும் புகழ் பெறுவர். அழியா பரமுக்தி

பெறுவர் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார் ( மயில் விருத்தம், செ.11).

**சேவல் விருத்தம்**

சேவல் விருத்தம் காப்புச் செய்யுளுடன் சேர்த்து 12செய்யுட்கள் கொண்டது. சேவல் நாத தத்துவம் ஆகும். பிரணவ மந்திரத்தை ஒலி வடிவில் உணர்த்துவது. ஆன்மாக்களை ஆணவ இருளிலிருந்து கூவித் துயில் எழுப்புவது. அடியார்களின் இடர்களையக் கூடியது. பேய்களை வெருட்டி ஓட்டும் பேராற்றல் பெற்றது. இருவினை யொப்பு வரக்கருணைபுரியக் கூடியது. எமன் அணுகும் போது சேவலும், மயிலும் முருகன் வரக் கூவி அருள் செய்யும். சேவலின் குரல் தரும் பயனை நூலின் இறுதிப்பாடல் விரிவாக எடுத்துரைக்கின்றது.

**கந்தர் அந்தாதி**

காப்புச் செய்யுள் உட்பட 102 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களை உடையது. வில்லிப்புத்தூராருடன் வாதம் செய்தபோது ஆசுகவியாக அருணகிரிநாதர் பாடியது. முருகப் பெருமானின் பலவகைச் சிறப்புக்களைப் பாடுவது. ஆறுபடை வீடுகளையும், சீர்காழி, கயிலை, வல்லம், இலஞ்சி ஆகிய தலங்களையும் பாடுகின்றது. இந்நூலில் எட்டுப்பாடல்களில் (27,29,56,65,75,89,96,100) திருஞானசம்பந்தர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

முருகனின் புகழைத்தாம் பாட முயல்வது கையால் கடலை நீந்திக் கடக்க முயல்வதற்கும், ஒரு குழந்தை தன் கையை நீட்டிச் சந்திரனை பிடிக்க முயல்வதற்கும் ஒப்பாகும் என்று அருணகிரிநாதர் கூறகிறார் (கந்தர் அந்தாதி, செ.10).

**கந்தர் அநுபூதி**

காப்புச் செய்யுள் நீங்கலாக 101 செய்யுட்களைக் கொண்டது. கந்தர் அனுபூதி என்பதற்குக் “ **கந்தரை ஆத்ம வடிவமாக அறியும் அறிவை உண்டாக்கும் நூல்**” எனப் பொருள் கூறுவர் (கந்தரனுபூதி முலமும் உரையும் (1925), ஸ்ரீ சாது கோ, வடிவேல் செட்டியார் உரை, ப.3).

கந்தர் அனுபூதி என்பதற்குச் கிருபானந்த வாரியார் பின் வருமாறு விளக்கம் கூறுகிறார். கந்தரைச் சேர்ந்து அடையும் கந்தரால் அடையும் அனுபூதி, கந்தரின்கண் அடையும் அனுபூதி என மூன்று வகையாகப் பொருள் கொள்ளலாம்

**கந்தரைச் சேர்ந்து அடையும் அனுபூதி**

முழுமையான மெய்யுணர்வு பெற்ற ஒரு அடியார் எல்லா உயிர்களும் தாம் பெற்ற இன்பத்தை அடைய வேண்டும் என்ற உயரிய உணர்வுடன் கந்தனை வழிபட்டு, தாம் வேறு, கந்தக் கடவுள் வேறு என்ற மாயை நீங்கப் பெற்று "**உடலும்உயிரும்**" போல முருகனைத் தன்மயமாக்கி அவனுடன் இரண்டறக்கலக்கும் அத்வைத நிலையைக் குறிக்கும்.

**கந்தரால் அடையும் அனுபூதி**

மேற்குறிப்பிட்ட இரண்டற்ற நிலையை அடைந்தவர்க்குக் கந்தக் கடவுள் தன்னை அடையாளம் காட்டும் வகையில், பொருளவில் அவரிடமிருந்து வேறுபட்டு, அதாவது "**கதிரவன் ஒளியும் கண்ணொளியும்**" போல நிற்கும் இரண்டற்ற நிலையைக் குறிக்கும்.

**கந்தரின் கண் அடையும் அனுபூதி**

இவ்வாறு தன்னை அடையாளம் கண்டு கொண்ட அடியார்க்குக் கந்தன் "**உயிரறிவும் கண்ணொளியும்** " போல தம்மோடு ஒன்றாய் நின்று நம்மைக் காணும்படி அருள் செய்யும் இரண்டற்ற நிலை எனவும் பொருள்படும்.

இவ்வாறு "**கந்தரனுபூதி**" மூன்று வகையான இரண்டற்ற (அத்வைத) நிலைகளிலும் ஒரு மெய்யடியார் அடையும் அநுபூதியாகிய பதிஞானத்தைக் காட்டி நிற்கும் என்கின்றார்.

அருணகிரிநாதர் தாம் கந்தக் கடவுளிடத்துப் பெற்ற கந்தர் அனுபூதியாகிய மெய்யுணர்வு இன்பத்தை அனைவரும் பெற வேண்டும் என்று இந்நூலைப் படைத்தார். "**அனைவருக்கும் இதமான நிலையில் இனித்து, அருளைப்பெறச்செய்யும், கந்தர் அனுபூதி பாடிய எம் தலைவனான அருணகிரிப் பெருமானின்**

**முழுமுதல் இறைவனே** ” என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார் (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 54. அகண்டபரம், செ.10).

அருணகிரி நாதர் கந்தரனுபூதி பாடியுள்ளதைப் பற்றி, “**ஒரு குற்றமும் அற்று அருளாற்றல் மிகுந்துள்ள கந்தர் அனுபூதி பாடிய அருணகிரிப் பெருமானின் நட்பை உகந்து ஏற்றுக் கொண்ட ஒப்பற்ற கருணை பொருந்திய அருட்கடலே**” (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 53. கடல், செ.10) என்றும்,

“**கந்தர் அனுபூதி பாடிய அருணகிரிப் பெருமானின் அரசே** ” (5. திருப்பா, 2. ஆம் புத்தகம், 55, பொன், செ.10) என்றும், பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

நான் நல்லாசிரியரிடத்து நன்னூற்களைப் படித்ததனால் உண்டாகும் கல்வியறிவையும், அதன் பயனாகிய மெய்யறி வையும் பெற வேலவர் அருள் செய்தார் உலகோரே ! தத்துவ ஞானம் பெற, முருகப் பெருமானின் அருளைப் பெற்றுவாழவிரைந்து முயலுங்கள் என அருணகிரிநாதர் கூறுகின்றார் (கந்தர் அனுபூதி, செ.17).

அனுபூதி நிலையை எவ்வாறு பெறலாம் என அருணகிரிநாதர் இந்நூலில் தெளிவுப்படுத்துகின்றார்

1. முருகப் பெருமானின் திருவடிகளைக் காணாத விழியும், கருதாத மனமும் முன் வினையால் வந்தவை. அப்பழவினை அகல முருகப் பெருமானின் திருவடிகளைச் சிந்தித்தல் ஒன்றே செய்யத் தக்கது (கந்தர் அனுபூதி, செ.52).

2. திருவடித் தியானம் செய்யாதார்க்கு உண்டாகும் தீமையைக் கூறி (செ.54) தியானம் செய்ய அறிவுறுத்துகின்றார்.

3. இரவும் பகலும் முருகப் பெருமானின் திருவடிகளைத் தொழும் பரிசே பரிசாக அருள்வாய் என இறைவனை வேண்டுதல் தக்கது (செ.57).

மேலும் அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் விண்ணப்பிக்கும் பிரார்த்தனைகள் பல உலகோர்க்கு முருகனருளைப் பெற வழிகாட்டும்.

1. “மட்டூர் குழல் மங்கையர் வலைப்
பட்டு ஊசல் படும் துயர் என்று ஒழிவேன் ” (செ.9)

என்று மங்கையர் மையல் வலையில் விழாதிருக்கப் பிரார்த்திக்கின்றார்.

2. பேராசையை ஒழிக்கப் பிரார்த்தித்தல் (செ.16).

3. மூவேடணையை ஒழிக்கப் பிரார்த்தித்தல் (செ.39).

4. மாயப் பிரபஞ்சத்தை வெறுத்துக் கூறுதல் வாயிலாக அருள் பெறப் பிரார்த்தித்தல் (செ.31).

5. உலக மயக்கம் ஒழியப் பிரார்த்தித்தல் (செ.89).

6. பற்றொழியப் பிரார்த்தித்தல் (செ.90).

7. அருள் பெறப் பிரார்த்தித்தல் (செ.69, 83).

8. அருள் பெறும் நெறி கூறல் (செ.101).

அரனார் வணங்கும் அருட்குரு நாதனே ! உன் அடியாரோடு கூடி, உன் நாமத்தைக் கூறி மகிழ்ந்து உன்னை வணங்குகின்ற அன்பர்கட்குக் கருணை செய்கின்ற உத்தமன் நீ அல்லவா ? என்றதனால் அருளைப் பெற இறையடியார் கூட்டமும், இறை நாமத்தை உச்சரித்தலும் வேண்டும் என்பது உணர்த்தப் படுகின்றது.

கடலைக் கடப்பவனுக்கு மரக்கலம் எத்தனை இன்றியமை யாததோ, மாடிமீது ஏறுபவனுக்கு ஏணி எத்தனை இன்றியமை யாததோஅதுபோல முக்தியுலகம் சேர விரும்பு வோர்க்கு அடியார் திருக்கூட்டம் இன்றியமையாதது.

**நிலைபெற்ற மெய்யறிவினால் உம்முடைய அடியார்களுடன் கூடி மகிழ்கின்ற நாள் என்று வருமோ** (முருக மயூர சேவக– திருப்புகழ் ) என்றும். **அடியேன் அவநெறி சென்று அலையாமல் அடியாருடன் கலந்து சிவநெறி பெற அருள்புரிவாய்** எனத் திருச்செந்தில் ஆண்டவனைப் பிரார்த்திப்பதும் (கண்டு மொழி – திருப்புகழ் ) இங்கு நினைவுகூரத்தக்கன. மாணிக்க வாசகர்அடியார்

நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய் என்று வேண்டுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

**" காடும் மலையும் கடலும் உருளச்**
**சாடும் தனிவேலுடையாய் சரணம்**
**ஆடும் மயில்வேல் அரசே சரணம்**
**பாடும் வர தற்பரனே சரணம் "**

(கந்தர் அனுபூதி, செ.98)

என்று, இறைவா உன்னையன்றி எனக்குப் புகலிடம் வேறில்லை. அதனால் நீ என்னைக் கைவிடாது காத்தருள வேண்டும் எனப் பிராத்திக்க வேண்டும்.

மாணிக்கவாசகர் அடைக்கலப்பத்து பாடியிருப்பதும் " போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிது ஒன்று இல்லை" என்று திருச்சதகத்தில் (செ.62) கூறியிருப்பதும் இங்கு நினைவுகூரத் தக்கன. பாம்பன் சுவாமிகளும் "**சரணவிண்ணப்பம்**" (1.51. சரணவிண்ணப்பம்) என்ற பதிகமும், "**அடைக்கலம்**" (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 4. அடைக்கலம்) என்ற பதிகமும் பாடியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கன.

கந்தவேளுக்கு அடிமையாய் அவரது திருவடிகளை வணங்கு கின்றவர்கள் வறுமைத் துன்பமும், யமபயமும், பகையும், பிறப்பும், அச்சமும் இன்றிவாழ்வர் (கந்தரனுபூதி, செ.100).

**கந்தர் அலங்காரம்**

காப்புப் பாடலும், நுறு கட்டளைத் துறைப் பாடல்களும் கொண்டது. முருகப் பெருமானின் சிறப்பினைப் பாதாதிகேசம் அழகுற வர்ணிப்பதால் கந்தர் அலங்காரம் எனப் பெயர் பெற்றது. முருகப் பெருமானின் மயில், வேற்படை, சேவல்கொடி ஆகியவற்றின் பெருமையைப் பேசுகின்றது.

கடைநாளில் செல்லும் வாழ்க்கைப் பயணத்தில் சாவு பற்றி அச்சம் யாருக்கும் வரும். அப்போது மனிதர் யாரும் துணைக்கு வர இயலாது. முருகப் பெருமானின் வேலும், மயிலும் துணையாக விளங்கும் என,

**"விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த**
**பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி**
**வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே "**
(கந்தர் அலங்காரம் செ. 70)

என்கிறார் அருணகிரிநாதர்.

நாம் எழுதிய எழுத்தில் பிழைபடுமானால் ரப்பரைக் கொண்டு அழித்து விடுகிறோம். அதுபோலநம் தலையில் பிரமதேவர் எழுதிய எழுத்தை அழிக்கின்ற ரப்பர் ஒன்று உள்ளது. அதுதான் முருகப் பெருமானின் திருவடி. முருகப்பெருமான் தன் தலையில் இணையடி சூட்டியதால் தன் தலையில் எழுதிய அயன் கையெழுத்து அழிந்து விட்டது என,

**"கால்பட்டு அழிந்து இங்கு என் தலை**
**மேல் அயன் கையெழுத்தே "**
(கந்தர் அலங்காரம், செ.40)

என்று அருணகிரி நாதர் கூறுகின்றார்.

உயிர்கட்கு கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று நிலைகள் உண்டு. சுத்தநிலை நினைப்பும், மறப்பும் அற்ற ஒப்புயர்வற்ற நிலை, அதனை இராப்பகல் அற்ற இடம் என்பர். அந்நிலையில் பேரின்ப ஊற்றுண்டு. அதை அநுபவித்தவர்கள் வேறு ஒன்றையும் கருத மாட்டார்கள். அந்நிலைக்கு வர கீழ்க்கண்டவைகள் வரவேண்டும் என்கின்றார் அருணகிரிநாதர் (கந்தர் அலங்காரம், செ.74).

1. அராப்புனை வேணியன் சேய் அருள் வேண்டும்.

2. அவிழ்ந்த அன்பால் குராப்புனை தண்டையந்தாள் தொழல் வேண்டும்.

3. கொடிய ஐவர் பாராக்கறல் வேண்டும். அதாவது ஐம்புலன்கள் தீநெறியில்செல்லாமல் நன்னெறியில் செல்ல வேண்டும். ஐம்புலன்களை உலகப்பொருட்களின் ஆசையில் செல்ல

விடாது, இறைவழியில் திருப்பி மன ஒருமையுடன் வழிபடல் வேண்டும்.

4. மனமும் பதைப்பறல் வேண்டும். புலன்களை ஒருமுகப் படுத்தும் போது மனத்தின் பதைப்பு அற்றுவிடுகிறது. மனம் அடங்காமையால் தான்பிறவிகள் ஓயாது வருகின்றன. மனம் அடங்கினால் மட்டற்ற சுகம் உண்டாகும். மனம் அடங்குதற் பொருட்டே வழிபாடு, ஜெபம், தியானம் முதலியன செய்யப்படுகின்றன.

நம் உடல் உறுப்புகள் இறைவழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் (கந்தர் அலங்காரம் , செ.76)

**"காட்டிற் குறத்திபிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்**
**வீட்டிற் புக மிக எளிதே** " (கந்தர் அலங்காரம், செ.85)

காட்டில் தினைப்புனம் காத்த வள்ளியிடம் காதல் கொண்ட முருகப் பெருமானின் திருவடியில் சிந்தையைச் செலுத்தினால் முக்தி பெறல் எளிதாகும் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

கந்தர் அலங்காரம் பல அறக்கருத்துக்களையும் கூறுகின்றது. முருகன் தமிழ்க் கடவுள் என்பது,

" **இயல் இசையின் முத் தமிழோனே** "
(பகலிரவினில் – திருப்புகழ்)
"**செந்தில் வாழ் செந்தமிழ்ப் பெருமாளே** "
(பங்கமேவு – திருப்புகழ்)

என்ற பாடல் தொடர்களால்அறியப்படும். செவ்வேள் பரமன் செந்தமிழ்ப் பரமாச்சரியன் ஆனபடியால் செந்தமிழில் மிக அன்புடையவன்.

" **செந்தமிழடில் சொல் பாவின் மாலைக்கார** "
(முந்து தமிழ் – திருப்புகழ்)

என்று அருணகிரிநாதர் கூறுகிறார். முருகப் பெருமான் தமழ்புலமைக்கு உளம்கனிவான்.

**“மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்,**
**முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன் ”**
(கந்தர் அலங்காரம், செ.22)

என்று அருணகிரிநாதர் கூறுவது முருகப் பெருமானுக்குத் தமிழில் உள்ள விருப்பத்தைப் புலப்படுத்துகிறதல்லவா?

**“சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் யமன்**
**சண்டைக்கும் அஞ்சார்**
**துலங்கா நரகக்குழி அணுகார் துட்டநோய் அணுகார்**
**கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தன் நன்னூல்**
**அலங்கார நூற்றுள் ஒருகவிதான் கற்றறிந்தோரே”**
(கந்தர் அலங்காரம், செ.101)

கந்தர் அலங்காரத்தில் ஒரு பாடல் கற்றாலே அடையும் பல பயன்களைக் கூறுவது இந்நூலின் சிறப்பை உணர்த்தும்.

**கந்தர் அலங்காரம் பாடியருளிய அருணகிரிநாதரின்** இறைவனை நீக்கமின்றி நினைக்கும் படிப் பாம்பன் சுவாமிகள் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார் (1.41. பகலெல்லாம், செ.24)

பாம்பன் சுவாமிகள் அருளிய பாடல்கள் 6666. அவை சுவாமிகளாலேயே ஆறுமண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை பாம்பன் சுவாமிகளின் பெருமை என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலின் 3 வது இயலில் அருணகிரிநாதரின் பாடல் கருத்துகட்டும், பாம்பன் சுவாமிகளின் பாடல் கருத்துக்கட்கும் உள்ள ஒப்புமைகூறப்பட்டுள்ளது.

## 3. அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும் ஒப்பீடு

இப்பகுதி, வரலாற்றில் ஒப்பீடு, பாடல் கருத்துக்களில் ஒப்பீடு என்ற முறையில் அமைகின்றது.

**வரலாற்றில் ஒப்பீடு**

**காலம்** அருணகிரிநாதர் 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாம்பன் சுவாமிகள் 19 ஆம் நற்றாண்டில் வாழ்ந்தவர்.

**மரபு** அருணகிரிநாதர் உருத்திரகணிகையர் மரபில் தேன்றியவர், செங்குந்த முதலியார் மரபில் தோன்றியவர் முருகபக்தி நிறைந்த சைவ வேளாளர் மரபில் தோன்றியவர் எனப் பலரும் பலவாறு கூறுவர். பாம்பன் சுவாமிகள் சைவவேளாளர் குடியில் பிறந்தவர்.

**பிறப்பு** அருணகிரியாரின் தாயார் முத்தம்மை திருவருணைத் தலத்தில் எழுந்தருளியுள்ள குமார மூர்த்தியிடம் தனக்கு ஒரு ஆண்மகவு வேண்டும் என விண்ணப்பித்துத் தவமிருந்ததால் பிறந்தவர் அருணகிரி. பாம்பன் சுவாமிகள் சாத்தப்ப பிள்ளை - செங்கமல அம்மாள் என்ற தம்பதியரின் அரும் தவத்தால் பிறந்தவர்.

அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள் இருவரும் பிறந்த வருடம், மாதம், தேதி முதலியன தெரியவில்லை.

பாம்பன் சுவாமிகள் கி.பி.1850, 1852 க்கும் இடையில் ஒரு வெள்ளிக்கிழமை பிறந்தவர் என்பர்.

**பிள்ளைத்திருநாமம்** தாய் முத்தம்மை தன் ஆண் மகவிற்கு இட்ட பிள்ளைத் திருநாமம் அருணகிரி என்பதாகும் . பாம்பன் சுவாமிகட்கு பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் அப்பாவு என்பதாகும். பாம்பன் தந்தி அலுவலகத்தில் வேலை பார்த்த சேஷகிரியார் என்பவர் சூட்டிய சிறப்புப் பெயர் குமாரகுருதாசர் என்பதாகும்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் பிறந்தவர். குமாரகுருதாசர் இராமேஸ்வர தலத்தில் பிறந்தவர்.

**முருகப் பெருமானையே போற்றுதல்**

இருவருமே முருகப் பெருமானையே முதற்கடவுளாகப் போற்றியவர்கள். குகக்கடவுள் ஒருவனையே புகழ்ந்துபாடி அவனருளை அடைந்த அருணகிரிநாதரின் செவ்விய திருவடிகளை உள்ளத்தில் வைக்கின்றோம் என்று பாம்பன் சுவாமிகள் அருணகிரிநாதர் துதியில் (பாயிரம் , செ.4 ) கூறுகின்றார். அருணகிரிநாதர் முருகப் பெருமான் ஒருவரையே போற்றுபவர் என்பதற்கு " **நின்னை அன்றி பிற தெய்வத்தை துதியேன்** " என்ற அருணகிரிநாதரின் வாக்கே (கந்தரனுபூதி, செ.86) சான்றாகும்.

இப் பாடலில், முருகப் பெருமானையே கற்பகவிருட்சம் என்று கருதி அடைந்திருத்தலால், சுவர்க்கலோகத்தை வேண்டி இந்திரனை இன் சொல் கூறிப் பிரார்த்திப்பேனோ ! பிரார்த்திக்க மாட்டேன் " என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகளும் வேறு தெய்வம் எதையும் துதித்துப் பாடாமல் முருகப் பெருமானின் திருவடியையே போற்றிப் பாடியவர் என்பதற்கு அவர் "**சூடேன் நின் அன்றித் துதித்து நான் எதையும் பாடேன் எம்மானே** " (2 – திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 13. திருப்பழநி, செ.5) என்ற அவரது வாக்கே சான்றாகும்

**முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்றவர்கள்**.

அருணகிரிநாதரும், பாம்பன் சுவாமிகளும் முருகப்பெரு மானிடம் உபதேசம் பெற்றவர்கள் அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்றது ஏற்கெனவே இந்நூலில் அருணகிரிநாதர் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. கி.பி. 1894 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6 அடி சதுரக்குழி ஒன்றை அமைத்து அதில் அமர்ந்து நிட்டை செய்தபோது, ஏழாம் நாள் அகத்தியரும், அருணகிரிநாதரும் உடன்வர முருகப் பெருமான் காட்சி கொடுத்து உபதேசம் செய்தருளினார். சுவாமிகள் முருகப் பெருமான் தனக்கு உபதேசம் செய்து உய்வித்த அற்புதத்தைப் பிரப்பன் வலசைப் பதிகத்தில் பாடியுள்ளார்.

**முருகப் பெருமானின் அருட்காட்சி பெறுதல்**

அருகிரிநாதருக்கு முருகப் பெருமான் பல தலங்களில் அருட்காட்சி நல்கிய செய்திகள் அருணகிரிநாதரின் வரலாற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு ஒப்பிடும் பொருட்டுத் தேவை கருதி, முருகப் பெருமானின் அருட்காட்சியை அருணகிரிநாதர் பெற்றது சுருக்கமாகச் சொல்லப்படுகின்றது.

அருணகிரிநாதர் அருணைக் கோயிலின் வடபால் உள்ள கோபுரத்தில் மேல் ஏறி நின்று கீழே குதித்து உயிர் விடத்துணிந்த போது முருகப் பெருமான் ஒரு தவமுனிவர் வடிவில் தோன்றி அவரைத் தாங்கிப் பிடித்தார். சம்பந்தாண்டானோடு அருணகிரிநாதர் வாது செய்த போது முருகப் பெருமான் அருணாசல வட கோபுர தம்பத்தில் மயில் வாகனத்தில் அமர்ந்து காட்சி அளித்தார். தில்லையில் நடராசப் பெருமானே முருகப் பெருமானாகவும், முருகப் பெருமானே நடராசப் பெருமானாகவும் காட்சி நல்கினார். அருணகிரிநாதர் வயலூரிலிருந்து விராலிமலைக்கு வரும்போது, வழி தெரியாமல் திகைக்க, முருகப்பெருமான் வேடர் உருவில் வழித்துணையாக அமைந்து விராலிமலைக்கு அழைத்து வந்தார். சுவாமிமலையில் அருணகிரியாருக்கு முருக வேளின் பாததரிசனம் கிடைத்தது. திருச்செந்தூரில் முருகப் பெருமான் நடனக் காட்சி தந்து அருள்புரிந்தார். அருணகிரிநாதருக்குத் திருத்தணி முருகன் தன் தேவியர்களுடன் மயில் மீது நடனதரிசனம் காட்டி அருளினார்.

பாம்பன் சுவாமிகள் பிரப்பன் வலசையில் நிட்டையில் இருந்த ஏழாம் நாளில் முருகப் பெருமான் காட்சி கொடுத்தார். பின்னர் சென்னையில் வசிக்கும் காலத்தில் தொடையிலும், அரையிலும் இரு கட்டிகள் தோன்றி சுவாமிகள் துன்பப்பட்டபோது முருகப் பெருமான் சிறுபிள்ளையாகத் தோன்றி மருந்து பூச கட்டி கரைந்து. குணமாயிற்று. ஒரு சமயம் சுவாமிகள் சென்னையில் நடந்து சென்ற போது ஒரு குதிரை வண்டியின் சக்கரம் சுவாமிகளின் இடக்கணைக்காலில் ஏறிக் கால் எலும்பு முறியவே அரசு பொது மருத்தவமனையில் சேர்ந்தார் பதினோராவது நாளில் சிறியதும் பெரியதுமான் இரண்டு மயில்கள் மேற்றிசையில் ஆகாயம் அளாவத் தோகை விரித்து ஆடி மறைந்தன. முருகப் பெருமான் ஒரு

சிறு குழந்தை வடிவில் சுவாமிகள் அருகில் படுத்து மறைந்தார். மயில் காட்சி பற்றி ஆறாம்மண்டலம், 3 கடாவிடைக் காண்டம், 4. அசோகசால வாசம், ஐந்தாம் பத்தில் செ.7 இல் சுவாமிகள் கூறியுள்ளார். முருகப் பெருமான் குழந்தையாகக் காட்சி கொடுத்தது பற்றி அசோகசாலவாசம் ஆறாம்பத்தில், செ.2 இல் கூறப் பட்டுள்ளது. காஞ்சியிலிருக்கும் போது குமரக்கடவுளே இவருக்கு வழித்துணையாக அடியார் உருவில் வந்து குமரகோட்டத்தைக் காட்டி மறைந்தார். இதனைச் சுவாமிகள் ஆறாம் மண்டலம் ஸ்ரீமத் குமாரசுவாமியத்தில் 5 ஆவதான பல திறப் பொருட் காண்டத்தில், வருகை விழைந்து இரங்கல் என்னும் 9 ஆவது பதிகம் 7 ஆம் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

சுவாமிகளின் பொருட்டு முருகப் பெருமான் ஆற்றிய அருட் செயல்கள் பல. அவை இங்குக் கூறப்படவில்லை முருகப் பெருமானின் அருட் காட்சிகளை பெற்ற செய்திகள் மட்டுமே இங்குக் கூறப்பட்டுள்ளன.

**தலயாத்திரை செய்தல்**

அருணகிரிநாதர் செய்த தலயாத்திரைகள் பற்றி அருணகிரி நாதரின் வரலாற்றுப் பகுதியில் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளன. பாம்பன் சுவாமிகள் செய்த தலயாத்திரைப் பற்றி இங்குக் கூறப்படுகின்றது. பாம்பன் சுவாமிகள் திருஆலவாய், திருவண்ணாமலை, திருக்காளத்தி, திருப்போரூர், திருமயிலம், திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர் திருத்தணிகை, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, சுசீந்திரம், செந்தில், திருக்குன்றக்குடி,குடந்தை, சிதம்பரம் முதலிய கோயில்களையும், கேரள, கர்நாடக மாநிலக் கோயில்களையும், வட இந்தியாவில் காசி, அயோத்தி, மதுரா, அரித்துவார் போன்ற பல திருத்தலங்களையும் தரிசித்து வழிபட்டவர்.

அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும் முருகப் பெருமானின் ஆறுபடை வீட்டுத் தலங்களைத் தரிசித்து வழிபட்டுள்ளனர்.

**தமிழிலும் வடமொழியிலும் புலமை**

அரணகிரி நாதர் பாடியருளிய திருப்புகழ்ப் பாக்கள் பல அவர்

தமிழ் மொழியிலும், வடமொழியிலும் புலமை பெற்றவர் என்பதை உணர்த்தும்.

பாம்பன் சுவாமிகள் அருளிய பரிபூரணானந்தத்திற்கு, சிவசூரியப் பிராகாசம் என்று எழுதிய உரை நூலும், தகராலய ரகசியத்திற்கு எழுதிய சதானந்த சாகரம் என்ற உரைநூலும், திருப்பா என்ற நூலில் உள்ள நான்கு பதிகங்கட்குச் சுவாமிகள் எழுதிய திட்பம் என்ற உரைநூலும் சுவாமிகளின் வடமொழிப்புலமையைத் தெற்றெனக் காட்டும்.

ஆரியம் ஒன்றே கற்று தமிழை இகழ்தலும், தமிழ் ஒன்றே கற்று ஆரியத்தை இகழ்தலும் அடாத செய்கை என்று சுவாமிகள் கூறுகின்றார்.

" **மந்திபோல் திரிந்து ஆரியத்தோடு செந்தமிழ்ப்
பயன் அறிகிலா அந்தகர்** " என்றும்,

"**வடமொழியும் கற்ற தமிழர் இரு விழியும் உடையாரை
ஒப்பர்** " என்றும் சுவாமிகள் கூறுகின்றார்.

(5.– திருப்பா, முதல் புத்தகம், திட்பம் என்னும் உரை, ப.20).

**ஜெபமாலை, உருத்திராக்கக் கண்டிகை அளித்தல்**

அருணகிரி நாதருக்குப் பழநி முருகப்பெருமான் ஜெபமாலை தந்தருளினார் என்பது அருணகிரிநாதர் வரலாற்றில் முன்னரே கூறப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் சுவாமிகள் பொன்னுசாமிப்பிள்ளை என்ற அன்பரிடம் ஆனந்தக் களிப்பைப் பாடிகாட்டியபோது முருகப் பெருமான் கட்டளையிட அவ்வன்பர் தான் வைத்திருந்த உருத்திராக்கக் கண்டிகையைச் சுவாமிகட்கு அணிவித்தார்.

**வாதில் வெல்லல்**

அருணகிரிநாதர் வில்லிப்புத்தூராருடன் வாது செய்து வென்ற செய்தி அருணகிரிநாதர் வரலாற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அங்குக் காண்க.

பாம்பன் சுவாமிகள் வைணவர்களுடன் வாதிட்டு வென்றார். ஒரு சமயம் சுவாமிகள் சிதம்பரத்தின் அருகிலுள்ள பின்னத்தூரில் சைவ அன்பர் சிவராம பிள்ளை வீட்டில் தங்கியிருந்தார். அவ்வமயம் இரத்தினசாமி பிள்ளை என்னும் சைவ அன்பர் சுவாமிகளைச் சந்தித்து, "சுவாமி இவ்வூர் வைணவர்கள் சிலர் சிவ பெருமானையும், சிவனடியார்களையும், சிவசின்னங்களையும், சிவாலயம், சிவலிங்கம் முதலியவற்றை இழிவாகப்பேசி வைணவமே சிறந்தது என ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்விய பிரபந்தகளையும், ஆழ்வார்கள் சரித்திரங்களையும் காட்டி எளியோரை மயக்கி வைணவத்தில் சேருமாறு செய்து வருகின்றனர். தாங்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திலிருந்து சிவபரமாக அமைந்துள்ள தருமங்களை விளக்கி ஒரு நூல் அருள வேண்டும்" என்று விண்ணப்பிக்க சுவாமிகள் "**நாலாயிரப் பிரபந்த விசாரம்**"என்ற நூலை அருளிச் செய்தார்கள். அந்நூல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலிருந்து சான்றுகள் காட்டி **சிவபரத்துவத்தை** விளக்குகின்றது. வைணவர்களின் இழிப்புரைக்கு மறுப்புத் தெரிவிக்கின்றது. சுவாமிகள் அந்நூலைப் பலருக்கும் போதித்து வரும் போது, **வைணவர்கள் சிலர் சேர்ந்து 1904 அம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் நாள் சுவாமிகளுடன் மூன்றுமுறை வாதிட்டுத் தோற்றனர். சுவாமிகளே வெற்றி பெற்றார்.**

**துறவு பெற விரும்புதல்**

**" வளை பட்ட கை மாதொடு மக்களென்னும்**
**தளை பட்டு அழியத் தகுமோ தகுமோ**
**கிளைபட்டு எழு சூர் உரமும் கிரியும்**
**தொளைபட்டு உருவ தொடு வேலவனே "**

(கந்தரனுபூதி, செ.4)

என்ற பாடல் அருணகிரிநாதர் துறவு பெற விரும்புதலை உணர்த்தும். வேலவனே ! மனைவி மக்கள் என்னும் கட்டிலே அகப்பட்டு நான் வருந்திக் கெடுவது உனக்குத் தகுதியோ, தகுதியோ. அதனால் என்னைக் கட்டினின்றும் நீக்கி பற்றற்ற நிலையை அருள் செய்தல் வேண்டும் என்கின்றார். பாம்பன் சுவாமிகள் பற்றற்ற துறவியாய் வாழ்ந்தவர். மனைவி, மகன் முதலியோர் இறந்தபோது

கூட போய்ச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யவில்லை, கி.பி. 1895 இல் சுவாமிகள் பாம்பனை விடுத்து மனைவி, மக்கள், செல்வம் எல்லாம் இழந்து துறவியானார். வெள்ளாடையில், இருந்த சுவாமிகள் காசியில் ஓர் அன்பர் கொடுக்க, காவி ஆடை அணிந்தார்கள். இதனைச் சுவாமிகள் காசியாத்திரை என்ற நூலில் செ.42 இல் குறிப்பிட்டுள்ளார்கள். காவியாடை அணிந்த நாள் சுபகிருது வருடம் ஆடி 22 புதன்கிழமை (6-8-1902).

**முக்தி அடைதல்**

அருணகிரிநாதர்,

**"தகைமை சிவஞான முக்தி பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணு நெய்த்த வடிவேலா"**
(சரணகமலாலயத்தை – சுவாமிமலை திருப்புகழ்)

என்று முருகப் பெருமானிடம் தனக்குப் பரகதி கொடுக்க வேண்டினார், அருணகிரிநாதர் திருவாதவூரரைப் போல சிதாகாசப் பெருவெளியில் மறைந்தருளினார். முருகப்பெருமானிடம் வேண்டியதையே அருணகிரி நாதர் பெற்று வீறுடன் மிளிர்ந்தார். அருணகிரிநாதர் முக்தி அடைந்த நாள் ஆனிமாதம் பௌர்ணமிநாள். பாம்பன் சுவாமிகள் அருணகிரி நாதரின் குருபூஜை ஆனி- பௌர்ணமியில் கொண்டாடப் படவேண்டும் என்று கூறினார். அருளாளர்கள் முக்தி அடைந்த நாள் தான் குருபூஜைநாள் என்று சொல்லப்படுவது வழக்கம். இதையொட்டியே அருணகிரி நாதர் முக்தி அடைந்த நாள் மேலே கூறப்பட்டது. குகப்பிரமத்தை வணங்கி **முக்திப் பேற்றை அடைந்த அருணகிரிநாதருடைய** இரண்டு திருவடிகட்கு அன்பு செய்திடும் அடியார் மேலானகதியை அடைவர் என பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். (1. சமாதான சங்கீதம்).

பாம்பன் சுவாமிகள் சுக்கில வருடம், வைகாசி மாதம் அமரபட்சத்து சஷ்டி திதியும், அவிட்ட நட்சத்திரமும் கூடிய புண்ணியப் போதில் முக்தி அடைந்தார். அந்நாள் 1929 மே 30 அம் தேதி குருவாரம் ஆகும். சுவாமிகளிடம் மிகுந்த **அன்புடையவர் தெய்வத்திரு முருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், இவர் பாம்பன் சுவாமிகளை இரண்டாம் அருணகிரி என்று போற்றி வழிபட்டவர்.**

**பாடல் கருத்துக்களில் ஒப்புமை**

**தத்துவாதீதன்**

முழுமுதற் பொருளாய பரம் பொருள் தத்துவாதீதன். அருணகிரி நாதர் "**நாதவிந்து கலாதீ நமோ நம** "
(திருவாவினன் குடித் திருப்புகழ், செ.1) என்கிறார்.

பாம்பன் சுவாமிகளும், "**ஆதி விந்து நாத அதீதனே**"
(1.9.புலியூர், செ.5) என்கின்றார்.

**ஞானவடிவம்**

அருணகிரிநாதர் "**ஞான பண்டித சாமிநமோநம**" (திருவாவினன்குடித் திருப்புகழ், செ.1) என்று இறைவன் ஞானவடிவினன் எனப் போற்றுகின்றார். பாமபன் சுவாமிகளும் "**நாத நாதாந்த ஞானநாயகன்** " (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, செ.14) என்று முருகப் பெருமானைப் போற்றுகின்றார். பாம்பன் சுவாமிகள் "**ஞானதெய்வம்**" என்ற தலைப்பில் (5. திருப்பா, 2 ஆம் புத்தகம், 42 ஞான தெய்வம்) ஒரு பதிகமே அருளிச் செய்துள்ளார்.

**பாட்டால் துதித்தல்**

நாம் விரும்பும் அர்ச்சனைப் பாட்டே ஆதலால் நம்மேல் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறையார் சுந்தரரிடம்.

சம்பந்தரைப் போலத் தமிழ்ப் பாடல்களைத்தாமும் பாடவேண்டும் என்று,

" **புவியதனில் ப்ரபுவான**
**புகலியில் வித்தகர் போல**
**அமுதக் கவித்தொகை பாட**
**அடிமை தனக்கு அருள்வாயே** " (திருப்புகழ்)

என அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார். மற்றோரிடத்தில் "**பாடும் பணியே பணித் தருள்வாய்**"என்று அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். பாம்பன் சுவாமிகள்,

**“வெண்பாவுஞ் செம்பாவும் வித்தாரப் பொன் பாவும்**
**பாண்பார் கரும் பாவு நின்பேரில் பாடிடுவேன் ”**
(2.1.52. மயிலமலை, செ.8)

என்று முருகப் பெருமானிடம் தான் பாடல்களால் போற்றுவதைக் கூறுகின்றார்.

**இறைவனைத் திரிகரணங்களால் வழிபடுதல்**

இறைவனை மனத்தால், வாக்கால், காயத்தால் வணங்க வேண்டும் என்ற கருத்தை,

**“சிந்திக்கிலேன் இன்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை**
**வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனைச்**
**சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்**
**புந்திக் கிலேசமும்காயக்கிலேசமும் போக்குதற்கே”**
(கந்தரலங்காரம், செ.60)

என்ற பாடலில் அருணகிரிநாதர் எதிர்மறை முகத்தால் கூறுகின்றார்.

சிந்தித்தல் – மனத்தால் நினைத்தல்
சேவித்தல் வந்தித்தல் – காயத்தால் வணங்குதல்
வாழ்த்துதல் – வாயால் புகழ்தல்
சந்தித்தல் – திரிகரணமும் ஒன்ற வழிபடுதல்
பொய்மை நிந்தித்தல் – உலகை நோக்கித் திரிகாரணங்கள் செல்லாமல் தடுத்தல்.

**வழிபாட்டினால் நவக்கிரகங்களினால் துன்பம் இல்லை**

**“நாள் என் செய்யும் வினைதான் என் செயும் என்னை நாடி வந்த**
**கோள் என் செய்யும் கொடும் கூற்று என் செய்யும் குமரேசர் இரு**
**தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்**
**தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே”**
(கந்தரலங்காரம், செ.38)

என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகளும்,

**“ஆதி இடை அந்தம் இல்லாத அயில் ஈசன் பாத இணை கொண்டு அருள் படைத்த நிபுணர்க்கு மாதமொடு, இராசி, திதி, வாரம் ஏழுநாள் கோள் ஏதும் இல்லை** என்று அறிவில் ஏறு உணர்நெஞ்சே” ( 1.47. நெஞ்சுப்பத்து, செ.7 ) என்கின்றார். அறிவுடைய நெஞ்சமே ! முதலும் நடுவும் முடிவும் இல்லாத வேலிறைவர் இரு திருவடிகளை வணங்க அருள் பெற்ற நிபுணர்கட்கு மாதம், இராசி, திதி, வாரம், ஏழுநாள் கோள் என எவையும் இல்லை என அறிவில் உணர்த்துவாயாக என்கின்றார்.

**திருவடிச் சிறப்பு**

திருவடித்தியானம் செய்யாதவர்கள் வினை செய்பவராய், பெருந் துன்பம் செய்தற்குரிய பெரிய நோயை அடைவர் ( கந்தர் அனுபூதி, செ.54) என்று திருவடித்தியானம் செய்யாதவர்கள் அடையும் தீமைகளை அருணகிரிநாதர் கூறுகின்றார். இறைவனே யான் உன் திருவடியை அறியாமையால் தியானம் செய்யாது ஒழிந்தேன். அதனால் கெடுதற்குரியவனானேன். மீண்டும் அத்தியானத்தைப் பெற அடியேனுக்கு நீ அருள் செய்தல் வேண்டும் என்று முருகப் பெருமானை அருனகிரிநாதர் பிரார்த்திக்கின்றார் (கந்தரனுபூதி, செ.23). இறைவனைத் திருவடித்தியானம் செய்பவர்க்கு நோயும், தரித்திரமும் மனக்கலக்கமும் ஒழிந்து போகும் (கந்தர் அனுபூதி, செ.71 ) என்கிறார் அருணகிரிநாதர். இறைவனே எனக்கு மறுபிறவி இருக்குமாயின் அப்பிறப்பிலும் என் மனம் நின் திருவடியைத் தியானம் செய்யும் பாக்கியத்தைப் பெற நீ அருள் செய்தல் வேண்டும் என்று அருணகிரிநாதர் பிரார்த்திக்கின்றார் (கந்தர் அனுபூதி, செ.72).

பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானின் திருவடிச் சிறப்பை,

**“ பாவம் பொடிபடும் பக்தியை ஈட்டுமே**
**சாவும் தொலைக்குமே தாரக மாவருள்**
**கூட்டுமே முக்தியைக் கூட்டுடன் காண் எனக்**
**காட்டுமே சண்முகன் கால் ”**
(2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 1. வெள்ளியல், செ.5)

என்கின்றார். சண்முகனின் திருவடி பாவத்தை ஒழிக்கும். பக்தியைத் தரும். மரணத்தைத் தொலைக்கும். பேரருளைத் தரும். சீவன் முக்தியைத் தரும் என்கின்றார்.

**மன அடக்கம் தேவை**

மனத்தை ஒரு முகப்படுத்தித் "தியானம்" செய்ய இயலாத மக்களின் இயல்பைத் தன் மேல் ஏற்றி,

**" சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில்**
**தவமுறை தியானம் வைக்க அறியாத**
**சட கசட மூட மட்டி பவ வினையிலே சனித்த**
**தமியன் மிடியால் மயக்கம் உறு வேனோ "**

(பழநித் திருப்புகழ்)

என்று அருணகிரிநாதர் கூறுகின்றார். அவர் வழியில் பாம்பன் சுவாமிகளும்,

**"தனியே இருந்து கண்மூடி ஐம்புல வழித்**
**தடம் அடைத்து உள் இயங்கும்**
**சதுர்வித மனாதி காரணங்களை ஒடுக்கி ஒரு**
**சமநிலையினின்று உன் அருளில்**
**கனிவுற்றிராத புன்மதியன் "** (1.13. திருமலை, செ.6) என்கின்றார்.

**காலன் வருமுன் காட்சி தரல் வேண்டல்**

கூற்றுவனின் மிக்க கொடிய தூதர்கள் பாசக்கயிற்றால் என் கால்களைக் கட்டித் தம்முடன் இழுத்துச் செல்ல, அன்புமிக்க மனைவி, மக்கள் மற்றம் தாயார் முதலியவர்கள் சுடுகாடு வரை என்னைத் தொடர்ந்து வந்து அலறி அழுவதற்கு முன்பாக சூலம், வாள், தண்டாயுதம், அழகிய சேவல், வில் இவற்றைக் கையில் ஏந்தி, திருவடி களில் அணிந்துள்ள தண்டைகளுடன், தோகை மயில் மீது தோன்றி அடியேன் முன் வரவேண்டும். என (காலனார் வெங்கொடு–திருப்புகழ்) அருணகிரிநாதர் கூறுகின்றார்.

**"சாகாது எனையே சரணங்களிலே**
**காகா நமனார் கலகம் செயுநாள்**
**வாகா முருகா மயில்வாகனனே**
**யோகா சிவஞான உபதேசிகனே"**

(கந்தரனுபூதி, செ.41)

அடியேன் மரண காலத்தில் யமன் வசமாய் இறவாத வண்ணம் உனது திருவடிகளின் நிழலிலே வைத்துக் காத்தருளக் கடவாய் என முருகப் பெருமானை அருணகிரிநாதர் பிராத்திக்கின்றார். அவர் வழியில் நின்று பாம்பன் சுவாமிகளும்,

**"காகா என ஆயுள் எல்லையும் நின்னைக் கருத்திருத்திச்**
**சாகா நிலையகஞ் சாகாது செத்துத் தனியிருக்கும்**
**யோகா கரப்பேறுடையார் விரும்பா உவர்த்தலுழைப்**
**போகாது என்னைப் புரந்தாள் கந்தகோட்டத்து புண்ணியனே"**

என்று முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறார்கள். (4. கந்தகோட்டம் மும்மணிக் கோவை, செ.3).

**நோய் தீரப் பிரார்த்தித்தல்**

**"இருமலு ரோக முயலகன் வாதம்**
**எரிகுண நாசி விடமே**
**நிரிழிவு விடாத தலைவலி சோகை**
**எழுகள மாலை இவையோடே**
**பெருவயிறு ஈழை எரிதலை சூலை**
**பெருவலி வேனும் உளநோய்கள்**
**பிறவிகள் தோறும் எனை நலியாத**
**படி உனதாள்கள் அருள்வாயே"**

(இருமலு ரோக – திருப்புகழ்)

என்று நோய்கள் வராதிருக்கத் திருத்தணி முருகனை அருணகிரிநாதர் பிராத்திக்கின்றார். பாம்பன் சுவாமிகள், "முருகப் பெருமானின் திருப் பெயராகிய மந்திரத்தைச் சொன்னாலே நீரிழிவு, குஷ்டம், உஷ்ணபேதி, பித்தபேதி, சுரம், நீங்காத வயிற்றுவலி, கண் நோய், குடலிலும், வாயிலும் ஏற்படும் புண், கொடிய ஜன்னி, குன்மம்,

பல்வலி, இருமல், காசம், மூலம், வாதம், வெப்பு, சோகை, புண்கள் மற்றுமுள்ள தீராத பிணிகள் எல்லாம் தீரும் " என்கிறார் ( 1.10. திருவருணை, செ.4).

**திருவைந்தெழுத்து மந்திரம்**

திருவைந்தெழுத்து மந்திரம் நமசிவாய, சிவாயநம, சிவாய, சிவ,சி, என பலவகையாகக் கூறப்படும்.

**"சிகர மருந்த வாழ்வது சிவஞானம்**
**சிதறி அலைந்து போவது செயலாசை**
**மகர நெருங்க வீழ்வது மகமாயை**
**மருவி நினைந்திடா அருள் புரிவாயே"**
(மாயாபுரி திருப்புகழ்)

"சிவாயநம என்ற பஞ்சாட்சர மந்திரத்தில் "**சி** " என்ற மந்திரத்தை ஓதினால் சிவஞானம் உண்டாகும். அம் மந்திரத்தை ஓதுவதால் மனம், வாக்கு, உடல் ஆகியவற்றின் செயல்களும் ஆசைகளும் அழிந்து போகும். " **ம** " என்னும் எழுத்து நெருங்கும் மந்திரத்தை உச்சரிப்பதால் தொலைந்து போவது மகாமாயை. அதனால் நின்னையே எண்ணித் தியானித்து, அதன் பயனாக நினைப்பும், மறப்பும் அற்றநிலை பெற அருள் புரிவாயாக" என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

திருவைந்தொழுத்து மந்திரத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் பொருள் உண்டு. "**ந**" என்பது திரோதானத்தைக் குறிக்கும். "**ம**" என்பது மூலமலமான ஆணவத்தைக் குறிக்கும் " **சி** ", "**வ** " என்னும் இரண்டும் முறையே சிவத்தையும், சிவத்துடன் அபின்னமாக (பிரிபற ) விளங்கும் சக்தியைக் குறிக்கும். "**ய**" என்பது ஆன்மாவைக் குறிக்கும் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார் ( 2.திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 2வது ஆசிரிய வியல், செ.138).

**அடியார் உறவு அவசியம்**

உயிர்கள் உய்திபெற ஆறுமுகச்சிவனின் அடியார் உறவு அவசியம் என்பதை,

**"சூரிற் கிரியிற் கதிர்வேல் எறிந்தவன் வன்தொண்டர்**
**குழாஞ் சாரிற் கதியன்றி வேறில்லை "**
(கந்தர் அலங்காரம், செ.49)

என்ற பாடல் தொடர்களால் அருணகிரிநாதர் உணர்த்துகின்றார். "திருச் செந்தில் ஆண்டவா ! அடியேன் அவநெறி சென்று அலையாமல் அடியாருடன் கலந்து சிவ நெறி பெற அருள்புரிவாய்" என அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் போற்றுகின்றார் (கண்டு மொழி – திருப்புகழ்) பண்பு பெற்ற அடியார்களுடன் கூடி அவர்களின் குறிப்பின் வழி ஒழுகினால் அப்பண்பு பெற்று உய்யலாம். பாம்பன் சுவாமிகள்,

**"பாராளும் வேந்தர்க்கும் பண்ணர் பாவாணர்க்கும்**
**வீராதி வீரர்க்கும் விண்ணோர்க்கும் அதிகம்**
**ஆரார் அயிலின் அடியார்"**
(2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 1. வெள்ளியியல் செ.59)

என்று இறைவனின் அடியார்கள் மிகப் பெருமை வாய்ந்தவர்கள் என்கின்றார் "**குரு, தெய்வம், சிவனடியார் என்னும் மூவுருவங்களையும் நிட்கள பாரபரமாக நினைத்து எக்காலமும் நல்ல நியமத்தொடு பூசித்து வரின் மனம் ஒடுங்கு நிலையை அடையும்** " (3. பரிபூரணானந்தபோதம், 2. துறவற விளக்கப் படலம், செ.96 ) என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

**பிழை பொறுக்க முறையீடு**

**" சின்னஞ் சிறியன் சிதைவே செய்யினும்**
**பென்னம் பெரியார் பிழை செய்குவரோ "**
(கந்தர் அனுபூதி, செ.64)

என அருணகிரிநாதர், சிறியோர் செய்யும் பிழையைப் பெரியோர் பொறுப்பது போல, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்று முருகப் பெருமானைப் பிரார்த்திகின்றார். பாம்பன் சுவாமிகளும் முருகப் பெருமானிடம் **பிழை பொறுக்க முறையீடு** செய்கிறார்கள். அப்பதிகப் பாடல் இறுதி தோறும்

"**பிழை பொறுத்தாள்வது உன் கடனே** " என முடிகின்றது.
(1.15. செ.1.10).

**அறக்கருத்துக்கள்**

**மூவாசைகளை நீத்தல்**

மனிதர்களின் ஆசை பலவாயினும், முக்கியமாக மூன்றினைக் குறிப்பிடுவர். அவை மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை.

**“மாவேழ் சனனம் கெட மாயை விடா**
**மூ வேடணை என்று முடிந்திடுமோ ?**
**கோவே குறமின் கொடி தோள் புணரும்**
**தேவே ! சிவசங்கர தேசிகனே ”**

(கந்தரனுபூதி, செ.39)

என்று அருணகிரிநாதர் மூவாசைகளை ஒழித்தற்குரிய சாதனத்தை நீ எனக்கு உபதேசித்து அருள வேண்டும் என முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றார் ( மூவேடணை - மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை) பாம்பன் சுவாமிகள் மண், பொன், பெண் ஆசைகளைப் பற்றிப் பலபாடல்களில் தனித்தனியே கூறியிருந்தாலும், சில பாடல்களில் மூவகை பற்றி ஒருங்கே கூறியுள்ளார்.

**“வீட்டின் மேலே மாட்டின்மேல் வேற்கண் மடந்தையர்மேல்**
**நாட்டின் மேலே சிந்தை நாட்டுகின்ற பூட்டை நெஞ்சே**
**இவ்வளவு நன்கு உனக்கு ஈந்த குமரன் சரணை**
**எவ்வளவும் எண்ணாதது என் ”**

(1.41. பகலெல்லாம், செ.9)

என்ற பாடலில்,

**வீட்டின்மேல் சிந்தை நாட்டல் - மண்ணாசை**
**மாட்டின் மேல் சிந்தைநாட்டல் - பொன்னாசை**

(மாடு - செல்வம்)

மடந்தையர் மேல் சிந்தை நாட்டம் - பெண்ணாசை நல்ல மனை, மனைவி, செல்வம், இவற்றை உனக்குத் தந்த முருகப்பெருமானை நீ நினையாதது ஏன் என்று நெஞ்சை பாம்பன் சுவாமிகள் வினவுகின்றார்.

**“பொன்னவிர் மேனி வேள் மண் பொருள் மகள் கேட்கவில்லை**
**மன்னில் மதிக்கும் சித்தி வரங்களைக் கேட்கவில்லை**
**சென்னிகள் நெருங்க வீழ்ந்து தேவர்கள் பரவும் உன் பாதம்**
**தன்னையே கேட்டேன் நீ தான் தயவு கூர்ந்து அளித்திலாயே”**

(1.29. பொன்னவிர் மேனி, செ.1)

என்கின்றார் சுவாமிகள். “நான் இறைவனிடம் மண்ணையோ, பொருளையோ கேட்கவில்லை, அட்ட சித்தி வரங்களை கேட்கவில்லை, தேவர்கள் கீழே விழுந்து தலைபடும்படி வணங்கும் உன் பாதங் களையே கேட்கிறேன் ” என்கின்றார்

**உலக வாழ்க்கையை வெறுத்தல்**

**“மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து**
**ஐயா அடியேன் அலையத் தகுமோ**
**கையோ அயிலோ கழலோ முழுவதும்**
**செய்யோய் மயில் ஏறிய சேவகனே”**

(கந்தரனுபூதி, செ.25)

என்ற பாடலில் “யான் உலக, வாழ்க்கையை நிலைத்தது என்று நம்பியதால் பல்லாற்றானும் தடுமாற்றம் அடைந்தேன். அதனை ஒழித்தற்குரிய ஒரு சாதனத்தை நீ எனக்கு கூறியருள வேண்டும்” என்று அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றார்.

பாம்பன் சுவாமிகள்,

**“பொய்யை ஓர்பவர் பொருந்தும்இப்பூதல வாழ்வை**
**மெய்யை ஓர்பவர் சேர்வர் கொல் மெய்ப்பொருளாம் உன்**
**செய்ய பாதம் நம்பிய எனைச் சேர்த்துக் கொள்ளாயேல்**
**உய்யுமாறு எனக்கு அருள்பவர் உலகினில் எவரோ”**

(2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 21.
பூரணம் விழைந்து இரங்கல், செ.8)

என்று முருகப் பெருமானிடம் வினவுகின்றார். நிலையற்ற இவ்வுலகப் பொருட்களை விரும்புபவர்கள், ஆராய்பவர் இப்பூவுலகில் மீண்டும் மீண்டும் பிறப்பர். அவர்கள் பிறப்பு ஒழியாது.

மெய்ப்பொருளை ஆராய்பவர், உணர்பவர் இவ்வுலகில் மீண்டும் பிறத்தலையோ, உலக இன்பம் நுகர்தலையோ விரும்பார். ஏனென்றால் உலக இன்பம் கணநேரத்தில் மறைந்து விடும். அவர்கள் மெய்பொருளைச் சார்ந்து, ஆராய்ந்து, உணர்ந்து அனுபவித்துப் பேரின்பம் துய்ப்பர். சுவாமிகளும் மெய்ப் பொருளாகிய முருகப் பெருமானை நம்பி அவன் திருவடிகளை வழிபடும் தன்னை அவன் ஆட்கொண்டு அருள்புரியாவிடில் தான் உய்யும்படித் தனக்கு அருள் செய்பவர் இவ்வுலகில் யார் உளர் என வினவுகின்றார். உய்யும் நெறி காட்டுபவன் இறைவன் ஒருவனே. பாம்பன் சுவாமிகள்,

**"சை என இகழ்வார் மெய்யர்உலகை"**

(ஞானவாக்கியம், 51)

என ஞானிகள் உலக வாழ்வைச் சீ என இகழ்ந்து நீங்குவார்கள் என்கின்றார்.

**அருள்பெறும் நெறி கூறல்**

**"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானம் என்றும்**
**இடுங்கோள் இருந்தபடி இருங்கோள் எழுபாரும் உய்யக்**
**கொடுங் கோபச் சூருடன் குற்றம் திறக்கத் தொளைக்க வைவேல்**
**விடுங்கோள் அருள் வந்து தானே உனக்கு வெளிப்படுமே"**

(கந்தர்அலங்காரம், செ.16)

என அருணகிரிநாதர் உலகோரை நோக்கி "மனத்தைத்தடுங்கள் . சினத்தை விடுங்கள். அறம் செய்யுங்கள். சும்மா இருங்கள், இங்ஙனம் செய்வீரேல் சூராதிகளை அழித்த செவ்வேட் பரமனது திருவருள் தானே உனக்கு வெளிப்பட்டுத் துணை செய்யும்" என்று கூறுகின்றார். மேலே கூறியுள்ள நெறிகளைப் பாம்பன் சுவாமிகளின் வாக்குகளுடன் ஒப்பிட்டுக்காண்போம்.

**தடுங்கோள் மனத்தை**– மனமானது எந்த நேரமும் ஓய்வின்றிச் சலித்துக் கொண்டே இருக்கிறது. அதனை இறைவனுடைய திருவடித்

தியானத்தால் ஒருமுகப் படுத்த வேண்டும். ஓய்வின்றிச் சலிக்கும் மனத்தைப் பாம்பன் சுவாமிகள் யானைக்கு, குரங்கிற்கு, கடலுக்கு, கறங்கிற்கு, சுழிக்காற்றுக்கு என ஒப்பிடுகின்றார். மனம் இறை வனைப்பற்றி ஒன்றி நிற்கின்ற நிலையே தியானம் எனப்படும் –மனமானது சித்திர விளக்கென அசையாது தியானத்தில் ஈடுபட வேண்டும் என பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார் (1.22. கதிரேசன், செ.9).

**"வெல்லுக வெளியில் செல்லு மனத்தை "**

(ஞானவாக்கியம், 108)

என்று பாம்பன் சுவாமிகள் கூறுகிறார்.

**விடுங்கோள் வெகுளியை**

மனிதனுக்குக் கோபம் பெரும் பகையாகும். விறகில் தீ இருக்கின்றது எரியும் போது அது தெரிகின்றது. அதைப்போல மனித நெஞ்சிலும் கோபம் என்னும் நெருப்பு உள்ளது. அந்த நெருப்பு எரியத் தொடங்கிளால், தீப் போல கண் சிவக்கும். உடம்பு நடுங்கும், நெஞ்சம் துடிக்கும். கையில் கிடைப்பதை போட்டு உடைக்கும். முகம் விகாரம் அடையும். சினத்தை மிகுதியாகக்கொண்டவன் ஞானம் அடைய முடியாது.

**"ஞொள்கல் வெகுளல் இன்று உள்குக நடுவே"**

(ஞான வாக்கியம், 59)

என்று பாம்பன் சுவாமிகள் சொல்வது படி மனம் அலையாதும், வெகுளாதும் இதய நடுவில் இறைவனைச் சிந்திக்க வேண்டும். "**ஆறுவது சினம்** " என்பது ஔவையின் வாக்கு

**தானம் என்றும் இடுங்கோள்**

**" தானமும் தவமும் தான் செய்வாராயின்**
**வானவர் நாடு வழி திறந்திடுமே "** (ஔவையார்)

பலனை எதிர்பாராமல் ஏழைகட்குத் தானம் செய்வது ஈகை. தான் என்னும் தன்முனைப்போடு தான தருமம் செய்யக் கூடாது. இறைவனை நினைந்து அருள்வழியில் நின்று தான தருமம் செய்ய வேண்டும்.

**“வையிர் கதிர் வடிவேலோனை வாழ்த்தி அறிஞர்க்கு என்றும்**
**நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள் ”**
(கந்தர் அலங்காரம், செ.18)

என்று அருணகிரிநாதர் கூறுகின்றார். பாம்பன் சுவாமிகளும்,

**“பற்றொழிந்து இரப்போர்கட்கு காதலால்**
**ஈயாத கை என்ன கை** ” (1.14. திருக்கைலாயமலை, செ.1)

என்கின்றார்.

**இருந்தபடி இருங்கோள்**

முருகப் பெருமானின் தண்டைத் திருவடித் தாமரையையே தஞ்சமாக அடைந்து, நினைப்பும் மறப்பும் அற்ற நிலையில் இருத்தல் “**சும்மா இரு சொல்லற**” என்றது முருகப் பெருமான் அருணகிரி நாதருக்கு உபதேசித்தது. மனத்தைத் தடுத்து, வெகுளி விடுத்து, உயிர்களின் மீது கருணையுடன் நாளும் நல்லறம் புரியும் நல்லன்பர்கட்கு இந்நிலை வந்து சேரும்.

முருகப் பெருமானின் திருவடிகளையே தஞ்சம் என வழிபடும் நெறியில் உயிர்கள் இளமையிலேயே நிற்கவேண்டும். முதுமையில் புலன் நுகர்ச்சிக்குரிய பல தன்மைகள் குறைந்துவிடும். அருணகிரிநாதர் முதுமையின் கொடுமையைத் திருப்புகழில் நன்கு எடுத்துரைக்கின்றார்

**“தொந்தி சரிய மயிரே வெளிற நிரை**
**தந்தம் அசைய முதுகே வளைய இதழ்**
**தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடி**
**தொண்டு கிழவன் இவன் ஆர் என இருமல்**
**கிண் கிணென முன் உரையே குழற விழி**
**துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி**
**தந்த பிணியும் அதிலே மிடியும் ஒரு**
**பண்டிதன் எனு மெயுறுவேதனையும் இள**
**மைந்தர் உடைமை கடனேது எனமுடுக துயர்மேவி**
**மங்கை அழுது விழவே யமபடர்கள்**

நின்று சருவ மலமே ஒழுக உயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும் ”

என அருணகிரிநாதர் திருப்புகழில் கூறுகின்றார்.

முதுமையில் வயிறு சரிய, மயிர் வெளுத்து, வரிசையாயிருந்த பற்கள் ஆட்டம் காண, வளைந்த முதுகுடன் உதடுகள் தொங்க, கையில் தடியுடன் வரும் நிலைகண்டு பெண்கள் ஏளனமாக நகையாடி,

“யார் இந்தத் தொண்டு கிழவன்” எனக் கேட்கவும், இருமலால் “கிண் கிண்” எனச் சொற்கள்குழற கண்கள் சோர்ந்து பார்வை மங்க, காது செவிடாகி, நோய்கள் ஏற்படுவதாலும், வைத்தியர்கள் தலையீட்டாலும் உடல் பலவாறு வேதனை அடைகிறது. அதே நேரத்தில் பெற்ற இளம் மைந்தர் “சொத்து மற்றும் கடன் விவரம் என்ன?” என்று நெருக்கிக் கேட்பதால் துன்பம் விளையும்,

அந்நிலையில் யமதூதர்கள் உயிரைப் பற்றுவதற்கு நெருங்கி வந்து போராடவும், மனைவி கதறி அழவும், மலம் ஒழுக, மரணவேதனையில் மயங்கும் போது விரைந்து முருகா நீ மயில்மீது வந்தருள வேண்டும் என முருகப்பெருமானிடம் அருணகிரி வேண்டுகின்றார்.

மரணகாலத்தில் யான் யமதரிசனம் பெறாது உனது தரிசனத்தை பெற வேண்டும் என முருகப் பெருமானைப் பிரார்த்திப்பது (கந்தர் அனுபூதி. செ.10) இங்கு நினைவு கூரத்தக்கது.

பாம்பன் சுவாமிகள் திருத்தணிகை மலைப் பதிகத்தில் முதுமை அடைந்து பலவித நோய்களால் வருந்தும் முன்பே முருகப்பெருமானின் மலர்போன்ற திருவடிகளை வணங்குவதாகக் கூறுவது இங்கு அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடலின் கருத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது. (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 51. திருத்தணிகைமலை, செ.1-10).

அருணகிரிநாதரின் பாடல்கட்கும், இரண்டாம் அருணகிரிநாதர் என்று கிருபானந்தவாரியாரால் போற்றப்படும் பாம்பன் சுவாமிகள் பாடல்கட்கும் கருத்து ஒப்புமைகள் பல உள. விரிவஞ்சி இந்நூலில் ஒருசிலவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**மனித நேயம்**

அருணகிரிநாதரும், பாம்பன் சுவாமிகளும் தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாக வாழ்ந்தவர்கள், **பக்தியும், ஒழுக்கமும் சமுதாயத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் இருகண்கள்** ஆகும். இவ்விருவரும் முருகப் பெருமானின் அருளை வேண்டிப் பாடியிருப்பதும், ஒழுக்க நெறிகளையும், பல அறஉரைகளும் கூறியிருப்பதும். **இவர்களின் மனித நேயத்தை உணர்த்தும். உலகம் உய்யப் பாடிய அற்புத ஞானத்தமிழ்** திருப்புகழ் என்று கிருபானந்தவாரியார் கூறுகின்றார். பாம்பன் சுவாமிகளும், **"உலகவர் பால் கருணை மிகக் கொண்டு அருள் புரிந்து அளவற்ற சந்தத் திருப்புகழ் பாடிய அருணகிரி** " (5. திருப்பா. 2ஆம் புத்தகம், 11. பேசாவாழ்வு, செ.10) என்று போற்றுகின்றார்.

**"உம்பர்கள் ஸ்வாமி நமோநம எம்பெருமானே நாமோநம**
**ஒண்டொடி மோகா நமோநம என நாளும்**
**உன் புகழே பாடி நான் இனி அன்புடன் ஆசார பூசை செய்து**
**உயர்ந்திட வீணாள் படாது அருள் புரிவாயே"**
(கொம்பனையார்காது– திருப்புகழ்)

என்ற திருப்புகழில் " தேவர்களது இறைவனே ! உன்னை வணங்கு கின்றேன். அடியேனது நாயகனே உன்னை வணங்குகின்றேன். வள்ளி மணாளனே உன்னை வணங்குகின்றேன் என்று நாள்தோறும் வணங்கி, நாட்களை வீணடிக்காமல் உனது திருப்புகழ் பாடி தூய்மையான மெய்யன்புடன் முறைப்படி தொழுது, ஈடேற அருள்வாயே" என்று கூறுவது அருணகிரிநாதரின் மனித நேயத்தை உணர்த்தும். அடியேன் எவ்வித மனக்கவலையும் இல்லாமல், உனக்கு அடிமையாகிச் சேவை செய்ய வேண்டும். மனுநூல் கூறும் நல்வழியில் தவறாமல் நடக்க வேண்டும். அடியேனது நேர்மையான ஆசைகள் திட்டமிட்டபடி நிறைவேற வேண்டும். சந்தேகம் எதுவும் இன்றி வேதங்களின் உட்பொருளை விரும்பித் தேட வேண்டும். தீவினை விளைவிக்கும் பாவச் செயல்களை நீக்க வேண்டும். முறையோடு உன்னையே ஒரு மனமாகச் சிந்திக்க வேண்டும் உயர்ந்த பொருளை உரைக்கும் வேதாதமங்கள் சொல்லும்

முறைகளைப் பின்பற்றி. கோபத்தை அறவே விலக்க வேண்டும். இத்தகைய நற்பண்புகளுடன் மகிழ்ச்சியாகச் செயல்படப் பரம் பொருளான உன்னையே வணங்கி உய்ய நீ வந்தருள வேண்டும்'' (மனக்கவலை ஏதும் இன்றி – திருப்புகழ்)

என்று அருணகிரிநாதர் கூறுவது மனித நேயத்தை உணர்த்தும்

**''ஈதலும் பல கோலால பூஜையும்**
**ஓதலும் குண ஆசார நீதியும்**
**ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை**
**சோழமண்டலம்''**

(நாதவிந்து கலாதீ திருப்புகழ்)

''இரப்போர்க்குக் கொடுத்தல், பல வகையான சிறப்பு இறை வழிபாடுகள் செய்தல், வேதங்களை ஓதுதல், நற்பண்புகள், ஒழுக்கம், நீதி, கருணை, குருநாதரின் தாள் பணிந்து தொண்டு செய்தல், ஆகியவற்றை மறவாமல் கடைப்பிடிக்கும் சோழமண்டலம்'' என்று சோழமண்டலத்தைப் பாராட்டுவது மூலம் அருணகிரிநாதர் உலக மக்கள் அனைவரும் இத்தகைய நற்பண்புகளைக் கடைப்பிடிக்க விரும்பும் மனித நேயத்தை உணர்த்தும்

''மனமே! இவ்வுடல் பிரமன் ஆராய்ந்து செய்த பூட்டு. இன்பத்திற்கும், துன்பத்திற்கும் இடம் தரும் பொறி. இதை நம்பாதே. முருகப் பெருமானிடம் அன்பு செய்யாமல் பல பிறவிகளை எடுத்து வந்தோம். இனியும் பிறவிகள் வாராதிருக்க முருகனிடம் அன்பு செலுத்துவோம். அதுவே ஆன்றோர்கள் வழியாகும். ஆதலால் மனமே நீ ஈடேற வேண்டி, குமரா என்று மறவாமல் ஓதுவாயாக'' (அந்தோ மனமே – திருச்சி திருப்புகழ்) என்று யாக்கை நிலையாமைமையும் சுட்டித் தன் மனத்திற்கு கூறுவது போல உலக மக்களைப் பக்தியுடனும், ஒழுக்க நெறியிலும் வாழ அருணகிரிநாதர் ஆற்றுப்படுத்துவது அவரது மனித நேயத்தை உணர்த்தும்.

அறநெறிகளிலிருந்து பிறலாமல் நிலையாக நிற்கவும், நல்லொழுக்கங்களையே கடைப்பிடிக்கவும் உயிர்களிடத்துக் கருணை செலுத்தவும், ஞானத்தைத் தந்தருள்வாயே, என்று

அருணகிரிநாதர் முருகனிடம் வேண்டுவது. அவரது மனித நேயத்தை உணர்த்தும் (நீ தத்துவமாகி – திருப்புகழ்).

வரங்களை வழங்கும் சிந்தாமணி நீயே என ஒரு மனப்பட்டு வணங்கினால் எதுதான் கிடைக்காது எல்லாம் கிடைக்கும் என "**வரதா மணி நீ என ஓரில் வருகாது எதுதான்**" என்று பழனித் திருப்புகழில், மக்களிடம் இறை நம்பிக்கையை ஊட்டுகின்றார். இறைவனை நம்புகிறவர்கள் தீமை புரிந்திட அஞ்சுவார்கள். இறைவன் அருள் வழங்குவதை நினைத்து பிறரிடம் கருணை காட்டுவார்கள். கொடுமைகள் புரிந்திடத் துணிய மாட்டார்கள். உலக வாழ்வின் நிலையாமையை மறக்க மாட்டார்கள் **மெய்யுணர்வு இன்பத்தை அனைவரும் பெறவேண்டும் என்ற மனிதநேயத்தால் அருணகிரிநாதர் அருளியதே கந்தர் அனுபூதி ஆகும்.** அருணகிரிநாதர் தெய்வ சிந்தனை வேண்டும் என்பதைக் கந்தர் அனுபூதியில் செ.32 இல் அறிவுறுத்துகின்றார். கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் விண்ணப்பிக்கும் பிரார்த் தனைகள் பல, உலகோருக்கு முருகப் பெருமானின் அருளைப் பெற வழிகாட்டும் என்பது "**அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள்**" என்ற பகுதியில் விரிவாக ஏற்கெனவே கூறப்பட்டுள்ளதால் இங்குக் கூறப்படவில்லை.

இனி பாம்பன் சுவாமிகள் கூறும் மனித நேயச் சிந்தனைகள் சிலவற்றைக் காண்போம். மனிதர்களின் நூறாண்டுகள் எவ்வாறு உறக்கத்தில், இளமைப் பருவத்தில், முதுமை நோய் நொடி என்று பயனின்றிக் கழிந்து போகிறது என்பதைக் கூறி அதனால் அருள் **நூல்கள் கற்பதும், அதன்படி ஒழுகி உயர்கதி அடைவது எப்படி என சுவாமிகள் கூறுவது அவரது மனித நேயத்தை உணர்த்தும்** (5. திருப்பா, திருவருட்கடல், செ.5).

**என்னைத் தள்ளினாலும், எனை நம்பினவரைத் தள்ளேல்** என்று சுவாமிகள் முருகப் பெருமானிடம் வேண்டுவது" (2. திருவலங்கல் திரட்டு, முதற்கண்டம், 54. கழுகுமலை பாதி கந்தகிரி பாதி, செ.9 ) அவரது மனித நேயத்தை உணர்த்தும். சுவாமிகள் மற்றொரு

நூலிலும் " **நாயேனைத் தள்ளினாலும் என்னை நம்பி உன்தாள் உகந்தவரைப் பராபர தள்ளிடாது அடி நல்கி ஆள்** " (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, செ.62) என்று கூறுகிறார்கள். அதே பாடலில் "**என்பால் கேண்மை மிக்கு வேண்டுவன அளித்து, என்னை நம்புகின்ற அன்பர்கட்கு உரிய செல்வத்தை எப்போதும் வழங்கியருள்**"என்று கூறுவது மனித நேயத்தை உணர்த்தும். "**எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்க நின் தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே**" என்றபடி, சுவாமிகள், "**திருவருளன்பு எந்த ஒன்றைக் காட்டிலும் பெரியதாகும். எல்லா மக்கட்கும் உன் நல்லருளை வழங்குவாயாக**" என்று முருகப் பெருமானை வேண்டுவது (5. திருப்பா, இரண்டாம் புத்தகம், 15. பெரிசாமி, செ.6) அவரது மனித நேயத்தைக் காட்டும்.

சுவாமிகள் தம் நூலில் பல இடங்களில் மனித நேயத்தால் மக்களுடைய குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக் கூறி, முருகப் பெருமான் அருளால் அக்குற்றங்களை நீக்கிஉய்ய வேண்டும் என்பதை உணர்த்தி, அவர்களை நன்னெறிப்படுத்துகின்றார்கள். விளக்கப் புகின் விரியும்.

சுவாமிகள் தம் சிவஞான தீபம் என்ற நூலில் மக்கள் கடைப் பிடிக்க வேண்டிய கட்டளைகள் 15 கூறியுள்ளார்கள். கட்டளைகளில் **எல்லா மனிதர் முன்பும் அன்பாகப் பேச வேண்டும். எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும்** என்று கூறுவது மனித நேயத்தை உணர்த்தும் அன்றோ. சுவாமிகள் மக்கட்கு உணர்த்தும் ஒழுக்க நெறிகளும், அறவுரைகளும் பலவாகும். இவை விரிவாக அடியேன் எழுதியுள்ள "பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகள் உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் " என்ற நூலில் விரிவாகச் கூறப்பட்டுள்ளது. மேலும் "**பாம்பன் சுவாமிகளின் பெருமை**" என்ற நூலிலும் உணர்த்தப் பட்டுள்ளது. (அவற்றை அந்நூல்களில் காண்க) இங்கு பக்கங்கள் மிக அதிகமாகி விட்டதால் சுருக்கமாகவே தரப்பட்டுள்ளன.

இறுதியாக ஒன்று அருணகிரிநாதர் தம் பாடல்களில் பொது மகளிரின் உறவால் ஏற்படும் கேடுகளைக் கூறியுள்ளது, மக்கள்

அவ்வுறவைவிட்டு விலகித் தங்களின் ஐம்புலன்களையும் இறைவழியில் திருப்ப வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே. இது அருணகிரிநாதரின் மனித நேயத்தை உணர்த்தும் அல்லவா ? இது அருணகிரிநாதர் அருளிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் திருப்புகழ்களில் "**மாதர் மயலுறாது தேவரீர் மலர்ப் பாதம் தந்தருள்வீர்** " என்று மிகப்பல பாடல்களில் அவர் கூறும் வாக்கே சான்றாகும்.

அருணகிரிநாதரின் குருபூசை சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சி இந்நூலை நிறைவு செய்கின்றேன்.

"ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்க
வெற்பை கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க
செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க ! வாழ்க சீர் அடியார் எல்லாம் "

